REGISTERED AS A NEWSPAPER பக்கங்கள் 06

விலை ரூபா 5.00

# ஈழநாதம்

THE EELANAATHAM மக்கள் தினசரி PEOPLES DAILY

நாதம் 5 | திருவள்ளுவர் ஆண்டு 2025 | ஐப்பசி 17 | 03-11-94 | வியாழக்கிழமை | ஓசை 258

## தபால் திணைக்கள ஊழியருக்கு 25 சதவீத சம்பள அதிகரிப்பு

தபால் திணைக்கள ஊழியர்களுக்கு இருபத்தைந்து வீத சம்பளம் அதிகரிக்கப்பட்டுள்ளது. சிறிலங்கா அரசினால் தபால் திணைக்களத்திலுள்ள சகல தரத்திலான ஊழியர்களிற்கும் 25வீத சம்பள அதிகரிப்பு வழங்கப்படவுள்ளது. இவ் அதிகரிப்பானது கடந்த ஆவணி மாதத்தில் இருந்து நடைமுறைக்கு வரவுள்ளது ஆவணி மாதத்தில இருந்து கொடுக்க வேண்டிய நிலுவைப்பணம் வரும் மாதங்களில் சேர்த்து வழங்கப்படவுள்ளதாக தபால் தொலைத்தொடர்பு அமைச்சு தெரிவிக்கின்றது.

# இந்திய புலனாய்வுத் துறையினர் விசாரணையைத் திசை திருப்பலாம்

## காமினி கொலை புலனாய்வு குறித்து கொழும்பு இராசதந்திர வட்டாரங்கள் கருத்து

(கொழும்பு)

காமினி திசாநாயக்காவின் கொலை குறித்து புலனாய்வு செய்ய இந்தியப் புலனாய்வுத் துறையினரை அழைப்பதென்ற அரசாங்கத்தின் முடிவானது கொலை குறித்த விசாரணைகளைத் திசைதிருப்பி விடலாம் எனக் கொழும்பு இராஜதந்திர வட்டாரங்களில் பரவலாகப் பேசப்படுகின்றது. விடுதலைப் புலிகள் இயக்கத்துடன் ஏற்கனவே முரண்பாட்டைக் கொண்டுள்ள இந்திய புலனாய்வுத் துறையினர் இவ்விசாரணையை தமது அரசின் குறிக்கோளுக்கு ஏற்ப பயன்படுத்திக் கொள்ளலாம் எனவும் அவ் வட்டாரங்களில் நம்பப்படுகிறது.

குண்டு வெடிப்பில் கொல்லப்பட்ட காமினி திசாநாயக்காவின் மனைவி சிறிமா திசாநாயக்கா கேட்டுக்கொண்டதற்கிணங்க காமினி கொலை தொடர்பான விசாரணைக்கு இந்தியப் புலனாய்வுத் துறையினரை அழைக்க சந்திரிகா அரசாங்கம் இணக்கம் தெரிவித்துள்ளமை தெரிந்ததே.

இவ்வாறு அழைக்கப்படவுள்ள இந்தியப் புலனாய்வுத் துறையினர் குறித்தே இராஜதந்திரிகள் மட்டத்தில் மேற்கூறப்பட்டவாறு பேச்சுக்கள் எழுந்துள்ளன. ஏற்கனவே ராஜீவ் கொலை வழக்கில் இந்தியப் புலனாய்வுத் துறையினர் விடுதலைப் புலிகள் மீது குற்றச்சாட்டுக்களைச் சுமத்தியுள்ள போதும் அவர்களால் அதனை நிருபிக்க முடியாத நிலையே உள்ளது என இராஜதந்திர வட்டாரங்கள் சுட்டிக்காட்டுகின்றன.

இந்நிலையில் காமினி திசாநாயக்காவின் கொலை தொடர்பாக இந்தியப் புலனாய்வுத்துறையினர் விசாரணைகளைத் திறந்த மனதுடன் மேற்கொள்வார்கள் என எதிர்பார்க்க முடியாது எனவும் விடுதலைப் புலிகளே கொலையைச் செய்தார்கள் என்றகற்பிதத்தின் பேரிலேயே அவர்களால் விசாரணை மேற்கொள்ளப்படலாம் அல்லது விசாரணையை அதை நோக்கி திருப்பி விடலாம் எனவும் மேலும் கருதப்படுகின்றது.

இந்த நிலையில் குண்டு வெடிப்புத் தொடர்பான புலன் விசாரணைகள் சரியான பாதையில் செல்வதற்கான வாய்ப்புக்கள் குறைவென்றும் இதனால் இவ் விசாரணை குண்டு வெடிப்பிற்குக் காரணமான உண்மையான சூத்திரதாரிகளைக் கண்டுபிடிக்க உதவுமா என்பது சந்தேகமே என்றும் அவ் வட்டாரங்களில் மேலும் கருதப்படுகின்றது.

## படகு விபத்தில் இருவர் காயம்

கிளாலியில் படகுகள் இரண்டு ஒன்றுடன்ஒன்றுமோதிக் கொண்டதில் இருவர் காயமடைந்து யாழ் போதனா மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

மானிப்பாய் பகுதியைச் சேர்ந்த செல்வரெட்ணம் (வயது 48) சாவற்கட்டு பகுதியைச் சேர்ந்த ஆர்- கணேசலிங்கம் (வயது 24) என்பவர்களே காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளவர்களாவார் (இ-நி)

## வெற்றி பெற்ற மாணவனுக்கு தலைவர் பரிசு வழங்கினார்

காந்தருபன் அறிவுச்சோலையின் முதலாம் ஆண்டு நிறைவுவிழா நேற்றுமுன் தினம் வெகு சிறப்பாக நடைபெற்றது

நேற்றுமுன்தினம் மாலை 6 மணிக்கு காந்தருபன் அறிவுச்சோலையில் ஆரம்பமான இந்நிகழ்வில் தமிழீழ தேசியத் தலைவர் வே. பிரபாகரன் கலந்து கொண்டு வாழ்த்துச்செய்தியினை வழங்கினார்.

தலைவர் அவர்கள் 'இளங்கதிர்' எனும் பெயரில் வெளியான காந்தருபன் அறிவுச்சோலையின் எட்டாவது மாத கையெழுத்துப் பிரதியை அறிவுச்சோலை பொறுப்பாளர் ரமேஸ் அப்பாவிடமிருந்து பெற்றுக்கொண்டார் மேலும் தலைவர் அவர்கள் தியாகி திலீபன் நினைவுக் கட்டுரைப் போட்டியில் யாழ் மாவட்டத்தில் முதலிடம் பெற்ற செல்வன் தவக்குமாருக்கு பரிசு வழங்கி கௌரவித்தார் இதனைத் தொடர்ந்து காந்தருபன் அறிவுச்சோலை மாணவர்கள் கலைநிகழ்ச்சிகளை வழங்கினர். இதன்போது காந்தருபன் அறிவுச்சோலை வாழ்த்துச் செய்தியும் வாசிக்கப்பட்டது.

நிகழ்வில் விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம், தமிழ அரசியல்துறைப் பொறுப்பாளர் தமிழ்ச்செல்வன் உட்பட விடுதலைப் புலிகளின் உறுப்பினர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

## விசாரணைக்கு யாரை அனுப்புவது; இந்திய அரசே தீர்மானிக்கட்டும்

(கொழும்பு)

காமினி திசாநாயக்க கொலை தொடர்பான புலன் விசாரணைகளை மேற்கொள்வது குறித்து எந்த வேளையிலும் இந்திய அரசுடன் இலங்கை அரசு தொடர்பு கொள்ளும் என வெளியுறவு அமைச்சர் லக்ஸ்மன் கதிர்காமர் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் மாலை இடம்பெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் இது குறித்து கருத்து வெளியிட்ட நீதி அமைச்சர் பேராசிரியர் ஜி. எல். பீரிஸ், புலன் விசாரணைக்கு குறிப்பிட்ட சிலதனி நபர்களின் உதவியை கோருவது சரியாக இருக்காது என தெரிவித்ததுடன் இதற்குரிய நிபுணர்களைக் குறிப்பிட்டு கூறும்படி தாம் இந்தியாவைக் கேட்கவுள்ளதாக அவர் தெரிவித்தார்.

## நோயாளர் கவனத்திற்கு

05-11-94 சனிக்கிழமை கொழும்பு செல்வதற்குத் தெரிவு செய்யப்பட்ட நோயாளர்களையும், கூடச்செல்பவர்களையும், இரண்டு நாட்களுக்குத் தேவையான உணவு, தண்ணீருடன் அன்று காலை 7.00 மணியளவில் யாழ்/போதனா வைத்தியசாலைக்கு வருமாறு பணிப்பாளர் கேட்டுக்கொள்ளுகின்றார்.

## மீன்பிடிக்க அனுமதி பெற்ற மீனவரே கடற்படையால் கொல்லப்பட்டனர்

### மன்னார் மறைமாவட்ட ஆயர் குற்றச்சாட்டு

கடலில் செல்ல கடற்படையிடம் அனுமதி பெற்ற அப்பாவி மீனவர்களே மன்னார் அரிப்புக்கடலில் படையினரால் கொல்லப்பட்டனர் என மன்னார் மறைமாவட்ட கத்தோலிக்க ஆயர் குற்றம் சாட்டியுள்ளார்-

இது தொடர்பாக அவர் படை அதிகாரிகளுக்கு கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார்- தன்னால் ஆம் மீனவர்கள் கடலில் செல்வதற்கென கடற்படையிடமிருந்து அனுமதி பெறப்பட்டதாகவும் ஆனால் 27ஆம் திகதி இம் மீனவர்கள் கடலில் வைத்து கொல்லப்பட்டுள்ளனர் என்றும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்-

இச் சம்பவத்தில் 9 மீனவர்கள் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்டு கடலில் வீசப்பட்டது தெரிந்ததே-

## விசாரணைகளை துரிதப்படுத்தவே கொழும்பில் அவசரகாலச்சட்டம்

### அமைச்சர் பீரிஸ் தெரிவிப்பு

[கொழும்பு]

காமினி திசாநாயக்காவின் கொலை விசாரணையைத் துரிதப்படுத்தும் நோக்கத்துடனேயே கொழும்பு மாநகர சபைப் பகுதியில் அவசரகாலச்சட்டம் அமுலில் இருப்பதாக நீதி அமைச்சர் ஜி. எல். பீரிஸ் தெரிவித்துள்ளார்.

பாதுகாப்புப் படையினர் மற்றும் விசாரணைகள் தொடர்பான அதிகாரிகள் விடுத்த வேண்டுகோளைத் தொடர்ந்து இவ்வாறான அவசரகாலச்சட்டம் அமுல் படுத்தப்பட்டதாக மேலும் அவர் தெரிவித்தார்.

கைது செய்தல், தடுத்து வைத்தல், அனுமதிப்பத்திரங்களைப் பரிசோதனை செய்தல் போன்ற அதிகாரங்களை இராணுவத்திற்கு வழங்கும் நோக்குடன் இந்த அவசரகாலச்சட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

## அமைச்சரவையில் 23 அமைச்சர்

ஜனாதிபதித் தேர்தலின் பின்னர் அமைச்சரவையில் மாற்றம் ஏற்படுத்தப்படவுள்ளதாக சிறிலங்கா அமைச்சரவையின் பேச்சாளர் தர்மசிறி சேனநாயக்கா தெரிவித்துள்ளார்.

வருங்காலத்தில் 23 அமைச்சர்களே அமைச்சரவையில் இருப்பார்கள் என்றும் சந்திரிகா குமாரதுங்காவின் வெற்றி நிச்சயம் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## தேடுதல் நடத்தச் சென்ற படை மீது விடுதலைப் புலிகள் தாக்குதல்

### இராணுவ சார்ஜன்ட் பலி

(கொழும்பு)

விடுதலைப் புலிகளுக்கும் சிறிலங்கா இராணுவத்தினருக்கும் இடையில் நேற்று முன்தினம் மட்டக்களப்புப் பகுதியில் இடம்பெற்ற மோதல் ஒன்றில் சிறிலங்கா இராணுவ சார்ஜன்ட் ஒருவர் கொல்லப்பட்டுள்ளார் என சிறிலங்கா வானொலி தெரிவித்துள்ளது.

விடுதலைப் புலிகளுக்கு எதிரான நடவடிக்கை ஒன்றை மேற்கொண்டு திரும்பி வரும் பொழுது விடுதலைப் புலிகள் திடீர் தாக்குதலை மேற்கொண்டதாக மேலும் தெரிவித்திருந்தது

## பாலத்துறை குண்டுவெடிப்பு

## நீதிபதி மேற்பார்வையில் விசாரணை நடைபெறும்

(கொழும்பு)

பாலத்துறை குண்டு வெடிப்பு தொடர்பாக நடைபெறும் சகல விசாரணைகளும் நீதிபதி ஒருவரின் மேற்பார்வையின் கீழ் நடைபெற்று வருவதாக பிரதிப் பொலிஸ்மா அதிபர் ''தினமின'' பத்திரிகைக்குத் தெரி

(6ஆம் பக்கம் பார்க்க)

## தேர்தலுக்கு 6000 பொலிஸ்

சிறிலங்காவில் ஜனாதிபதித் தேர்தலை நடாத்துவதற்கென விசேட பாதுகாப்பு ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

(6ஆம் பக்கம் பார்க்க)

## யுத்தத்திற்கு 5கோடி ரூபா நாளாந்தம் செலவீடு

### சுயாதீன தொலைக்காட்சித் தலைவர்

(கொழும்பு)

வடக்கு-கிழக்கில் நடைபெறும் யுத்தத்தினால் அரசிற்கு நாளாந்தம் ஐந்து கோடி ரூபா செலவு ஏற்படுகிறது என முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் சுயாதீன தொலைக்காட்சிச் சேவையின் தலைவருமான டி. குணசேகர தெரிவித்துள்ளார்.

இரத்தினபுரி பட்டணசபை மண்டபத்தில் அண்மையில் நடைபெற்ற கருத்தரங்கு ஒன்றில்உரையாற்றும்போது அவர்

(6ஆம் பக்கம் பார்க்க)

## தற்கொலைப் படையாளிக்கு டாக்டர் புகலிடம் அளித்தது குறித்து விசாரணை.

பாலத்துறை குண்டுவெடிப்புத் தொடர்பாக சந்தேகத்திற்கு உட்பட்டிருக்கும் பெண்ணிற்கு புகலிடம் கொடுத்ததாக கூறப்பட்ட டாக்டர் ஒருவர் மீது சிறிலங்கா குற்றப் புலன் விசாரணைப் பிரிவினர் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்-

மேற்படி டாக்டர் அரசாங்க வைத்தியசாலையொன்றில் கடமையாற்றி வருகிறார் என்றும் இவர் தொடர்பாக குற்றப் புலன் விசாரணைப் பிரிவுகள் விசாரணை மேற்கொண்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது-

இவரிடம் வாக்கு மூலம் பெறும் பொருட்டு விசேட இரகசியப் பொலிஸ் பிரிவொன்று நியமிக்கப்பட்டுள்ளதாக சிரேஷ்ட இரகசியப் பொலிஸ் அதிகாரி தெரிவிக்கின்றார்-

## தாய்க்குப் பதில் தனயன் தேர்தல் பிரசாரம்

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சி ஜனாதிபதி வேட்பாளர் திருமதி சிறிமா திசாநாயக்காவிற்குப் பதிலாக அவரது மகன் தேர்தல் பிரசாரங்களில் ஈடுபடுவார் என தெரிவிக்கப்படுகிறது-

எதிர்வரும் 9-ம் திகதி நடைபெறவுள்ள ஜனாதிபதி தேர்தலுக்கு முன்னதாக எட்டு தேர்தல் பிரசார கூட்டங்களை நடாத்த ஐக்கிய தேசியக்கட்சி தீர்மானித்துள்ளது-

இக்கூட்டங்களில் பாதுகாப்புக் காரணங்களுக்காக காமினி திசாநாயக்காவின் மனைவி திருமதி சிறிமா திசாநாயக்கா கலந்துகொள்ள மாட்டார் எனவும் அவருக்கு பதிலாக அவரது மகன் நவீன் திசாநாயக்கா கலந்துகொள்வார்-

திருமதி சிறிமா திசாநாயக்கா எலக்ரோனிக் தொடர்பு சாதனங்களுடாகவும், செய்திப் பத்திரிகைகள் மூலமும் தமது கருத்துக்களைத் தெரிவிப்பார் எனவும் பாராளுமன்ற அங்கத்தவர் சரத் அமுனுகம தெரிவித்துள்

## 50க்கு மேற்பட்ட தமிழர் பொலிசாரால் கைது

[கொழும்பு]

கடந்தஞாயிறன்று 50க்கும் மேற்பட்ட தமிழர்கள் கொழும்பில் பொலிசாரால் கைது செய்யப்பட்டனர். லொஜ்களிலும் வீடுகளிலும் தற்காலிகமாக தங்கியிருந்தவர்களே இவ்வாறு பொலிசாரால் கைதுசெய்யப்பட்டனர்

கைதானவர்களில் 20 பேர் பெண்கள் ஆவர் காமினி திசாநாயக்கா குண்டு வெடிப்பில் கொல்லப்பட்ட பின்னர் மீண்டும் பொலிசாரின் தேடுதல் நடவடிக்கைகள் கொழும்பில் தீவிரமாகியுள்ளன

## வரி விளம்பரம்

**நாளை வியாபார மாற்றம்**

நாளை (04-11-94) வாக்கியப்படியும் 11-11-94 திருக்கணிதப்படியும் வியாழன் துலாராசியிலிருந்துவிருச்சிகத்திற்கு மாற்றமடைகிறது. சோபிதா புத்தகசாலை, மக்மிலன் புத்தகசாலை: யாழ்ப்பாணம். நூலாசிரியர் PROF சத்யதாஸன் கட்டுடை [9956)

## மிதிவெடியில் பெண்மணி படுகாயம்

(யாழ்ப்பாணம்)

கிளிநொச்சியில் தோட்டத்தினுள் புதையுண்டிருந்த மிதிவெடி, தோட்டம் கொத்தும் போது மண்வெட்டி பட்டதில் வெடித்து பெண் ஒருவர் படுகாயமடைந்தார்.

மேற்படி சம்பவம் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடந்துள்ளது. தனது தோட்டத்தை கொத்திக்கொண்டிருந்த பரமேஸ்வரி (வயது 54] என்பவரே மண்வெட்டியால் மிதிவெடி கொத்துண்டதில் அது வெடித்த போது படுகாயமடைந்தவராவார்.

படுகாயமடைந்தவர் உடனடியாக கிளிநொச்சி மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லப்பட்டு அங்கிருந்து நேற்றுமுன்தினம் யாழ்போதனாமருத்துவமனைக்கு மேலதிக சிகிச்சைக்காக கொண்டு வரப்பட்டுள்ளார். (சி)

## குடியிருப்பு மக்கள் அவதி

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பழை, சங்கானை சண்டிலிப்பாய் ஆகிய உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில் இருந்து இடம் பெயர்ந்த சுமார் 300 குடும்பங்களைச் சேர்ந்த 1300 பேர் தங்கியுள்ள முகாமான கைதடி தேவகி குடியிருப்பில் (ரயர் தொழிற்சாலை) போதிய மலசல கூட வசதி இல்லையென தெரிவிக்கப்படுகின்றது. நிரந்தரமானதாகவோ தற்காலிகமானதாகவோ ஒரு மலசல கூடம் கூட இல்லையென்றும் இதனால் மக்கள் பெரும் 'சங்கடத்தை' எதிர் நோக்குவதாகவும் குடியிருப்பு நிர்வாக வட்டாரங்கள் தெரிவித்தன. அத்துடன் குடியிருப்பில் மக்களுக்கென ஒரு வாசிகசாலை இல்லையென்றும் மக்கள் பலத்த சிரமங்களின் மத்தியில் வெளியிடங்களுக்குச் சென்றே தமது வாசிக்கும் ஆவலைப் பூர்த்தி செய்து வருவதாகவும் அவ்வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன. (22)

## 'மாகோ'வில் மலத்தியோன்

[யாழ்ப்பாணம்]

தற்பொழுது கொழும்பில் தரித்து நிற்கும் 'மாகோ' கப்பலில் அனுமதியளிக்கப்பட்ட மலத்தியோன் மருந்து எடுத்து வரப்படவுள்ளது.

கடந்த காலத்தில் சுகாதார பகுதியினரின் மலேரியா தடுப்பு இயக்கத்தினர் 500 பெட்டி மலத்தியோன் மருந்தை சிறிலங்கா அரசிடம் கேட்டிருந்தனர் இதற்கு 152 பெட்டிகளே அனுமதிக்கப்பட்டிருந்தது இவற்றையே வரவிருக்கும் 'மாகோ' கப்பலில் எடுத்து வருவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

யாழ் குடாநாட்டில் ஒரு முறை மட்டும் சகல இடங்களிற்கும் தெளிப்பதற்கு 750 பெட்டிகள் தேவைப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது. (இ,தி)

## முத்தமிழ் விழா

பலாலி ஆசிரியர் கலாசாலையின் வருடாந்த முத்தமிழ் விழா' நாளை வெள்ளிக்கிழமை காலை 8.30மணியளவில் தமிழ் மன்றத் தலைவர் திரு. குயின்ரஸ் திருஞானம் தலைமையில் நடைபெறவுள்ளது.

கலாசாலை அதிபர் திருமதி த. அரிராஜசிங்கம் அவர்களின் ஆசியுரையுடன் ஆரம்பமாகும் இந் நிகழ்விற்கு பிரதம விருந்தினராக வலயம்1 கல்விப் பணிப்பாளர் செல்வி திலகவதி பெரியதம்பியும், சிறப்பு விருந்தினராக தமிழீழ கல்விக் கழகப் பொறுப்பாளர் திரு. வே. இளங்குமரனும் கலந்துகொள்கின்றனர்.

---


### தொழில் நுட்பக் கல்லூரி
### இறுதிப் பரீட்சைகள் - 1994

எமது கல்லூரியில் பயின்ற மேற்படி பரீட்சைக்கு விண்ணப்பிக்க தகுதியுள்ள மாணவர்கள் தாது மாணவ பிரவேச அனுமதிச்சீட்டுடன் 1994-11-03-ம் திகதி முதல் 1994-11-10-ம் திகதி வரை உள்ள காலப்பகுதியில் தத்தமது பகுதித் தலைவர்களிடம் படிவத்தைப் பெற்று உரிய பரீட்சைக் கட்டணத்தை அலுவலகத்தில் செலுத்தி விண்ணப்பிக்குமாறு அறியத்தருகிறேன்.

தொழில் நுட்பக் கல்லூரி
பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்,
1994-10-31

க. ஜெயரத்தினம்
அதிபர்.

(சி-10627)


---

### 1-ம் ஆண்டு நினைவஞ்சலி

தாயின் மடியில்
19.04.75

தாயக மண்ணில்
13.11.93



**வீரவேங்கை மார்க்கண்டேயர்**
(செல்லத்துரை உதயக்குமார்)

நண்பர்கள், போராளிகள் அனைவரையும் 03-11-94 இன்று எமதில்லத்தில் இடம் பெறும் மதிய போசனத்தில் கலந்து கொள்ளும்படி அன்புடன் அழைக்கின்றோம்.

உயரப்புலம்
ஆனைக்கோட்டை

அப்பா, அம்மா
தம்பி

(9960)

---

### 1-ம் ஆண்டு நினைவஞ்சலி



## லெப். செய்யவன்
### (நேரு)
### (கணபதிப்பிள்ளை தங்கறூபன்)

பிறப்பு:- 07. 05. 1975

வீரச்சாவு:- 18. 11. 1993

இந்த மண் எங்கள் முந்தை மண்
இதில் சிங்களர் புகுந்திடலாமோ - என
பொங்கிய புலியது புகுந்தது பூநகர்
பொசுங்கியே போனது கொடியவர் கூட்டம்
செய்யவன் சென்றனன் செந்தணல் கொண்டு
செத்து மடிந்தனர் சிங்களச் சேனை
அண்ணன் அவன் வகுத்த தவளைக்கு
தம்பி இவனுமோர் வேவு சொன்னான்
பொய்யது இது இல்லை - எங்கள்
புலியது வெல்வது உண்மை
செய்யவா நீயும் வாழ்வாய் - எங்கும்
செற்றிடா செம்மை கொண்டு
மறக்குமா உந்தன் நினைவு - என்றும்
வாழுவாய் எங்கள் நெஞ்சில்.

நீங்கா நினைவுடன்
- குடும்பத்தினர்.

பெரியபளை,
பளை.

(9926

---


### யாழ்ப்பாணம் நீராவியடி கலைக் கல்லூரியின்
## 15வது ஆண்டு நிறைவு விழா

இடம்:- இளங்கலைஞர் மன்றக் கலா மண்டபம்

காலம்:- 06.11.19்4 ஞாயிறு மாலை 6 மணி

தலைவர்: புலவர் முத்து இராசரத்தினம்

மங்கள விளக்கேற்றல்: திரு. நா. சின்னத்துரை (வண்-வடகிழக்கு சனசமூகநிலைய தலைவர் நீராவியடி)

பிரதம விருந்தினர்: புதுவை இரத்தினதுரை (விடுதலைப் புலிகள் கலை பண்பாட்டு கழகப் பொறுப்பாளர், தமிழீழம்)

சிறப்பு விருந்தினர்: திரு. வே. பொ. பாலசிங்கம் (யாழ் மாநகரசபை ஆணையாளர்)

செல்வி மலர் சின்னையா (உபஅதிபர் நல்லூர் மங்கையர்க்கரசி பாடசாலை)

நிகழ்ச்சி: கலைக்கல்லூரி வழங்கும்
திருமதி சிவசக்தி இலங்கைவேந்தனின் நட்டு வாங்கத்தில்
**கதகளி, பரதநாட்டியம்**
கலைஞர் எஸ். பொன்னுத்துரையின் இசையமைப்பில்
**இன்னிசை விருந்து**
புலவர் முத்து இராசரத்தினத்தின் கதை வசனம் நெறியாள்கையில்
**இலங்கை வேந்தன்**
(இசை, நடன, நாடகம்)

அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்
கலைக்கல்லூரி நிர்வாகம்

விழா சிறப்புற வாழ்த்துபவர்கள்
ஆர். வி. ஜி. பீடி ஸ்தாபனம்
2-ம் குறுக்குத்தெரு, நல்லூர்.

(9963)


---

### நினைவாக4ம் ஆண்டினில்



மகனாக
1969. 08. 25

நினைவாக
1990. 10. 18

**லெப்: ரகீம்**
(பொன்னுச்சாமி விஜயமுரளி)

திதி 1994 - 11 - 03

களங் கண்டு சமர் வென்று
தமிழீழம் தனை வெல்ல
தனை அர்ப்பணித்து
ஆகுதியான மாவீரர்

உனது அர்ப்பணிப்பு அர்த்தமுள்ளதாகும்
உன் இலட்சிய தாகம் நிறைவேறும்
விரைவினில் மலரும் தமிழீழம்

இவரின் ஆத்மசாந்தி வேண்டி 94 11. 03 இன்று எமதில்லத்தில் நடைபெறும் நிகழ்வில் போராளிகள் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

''ரகீம் வீதி''
கச்சாய். [9848] - குடும்பத்தினர்

---

### ஓராண்டு நினைவஞ்சலி

பிறப்பு
21.11.1971

வீரச்சாவு
13.11.1993



**கப்டன் சாமி**
(இராசையா வசந்தன்)

இவருடன் அன்றையதினத்தில் வித்தாகிய வீரர்கள் அனைவருக்கும் எமது அஞ்சலிகள்

இன்று எமது இல்லத்தில் நடைபெறும் மதியபோசத்துக்கு சகல போராளிகளையும் உற்றார் உறவினர் அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்-

47, ஆனந்தம் வடலி வீதி,
அரியாலை.

-குடும்பத்தினர்
(9961)

---

## வயிற்றோட்டம், காய்ச்சல் குடாநாட்டில் அதிகரிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டில் குழந்தைகளிற்கு வயிற்றோட்டம் காய்ச்சல், வாந்தி போன்ற நோய்கள் அதிகரித்து வருவதாக யாழ் போதனா வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இது அண்மைக்காலமாக பெய்து வரும் மழை காரணமாக குடிநீர் அசுத்தமடைவதனால் ஏற்படுவதாக கூறப்படுகிறது.

குடிநீரை சுத்தப்படுத்தி பாவிப்பதால் இது போன்ற நோய்களை பெருமளவு குறைக்க முடியும் எனவும் மேற்படி வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (இ)

---

## நினைவு கூருகின்றோம்...

### 03. 11. 94

1986- ஆண்டு இத்தினத்தில் வீரச்சாவெய்திய,

★ **தம்பி** (கணபதிப்பிள்ளை ஜெபநாதன் - நாவற்குடா - மட்டு

1987-ம் ஆண்டு யாழ் - பொன்னாலைப் பகுதியில் இந்தியப்படையினருடனான சமரில் வீரச்சாவெய்திய,

**2ம்-லெப். சுகன்** (மாரி சத்திவேல் - வாமதேவபுரம், அடம்பன் - மன்னார்)

யாழ் - கொக்குவில் பகுதியில் இந்தியப்படையினருடனான சமரில் வீரச்சாவெய்திய,

**றூபி** (மாரியம்மா மாரிமுத்து - இலுப்பைக்கடவை - மன்னார்)

யாழ் . கோண்டாவில் பகுதியில் இந்தியப்படையினரின் எறிகணைத் தாக்குதலில் வீரச்சாவெய்திய,

**சபரி** (ஹம்சா அத்துவிநானந்தன் - திருநெல்வேலி தெற்கு - யாழ்)

1988-ம் ஆண்டு பாவற்கொடிசேனையில் இந்தியப்படையினர் சுட்டதில் சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய,

**லெப். ஜஸ்ரின்** (அந்தோனி ஆரோக்கியநாதன் - வீச்சுக்கல்முனை, புதூர் - மட்டு)

யாழ் - சரசாலைப் பகுதியில் தேசவிரோதிகளால் சுட்டுக் கொல்லப்பட்ட நாட்டுப்பாற்றாளரான,

**சுந்தரம்**

1990-ம் ஆண்டு மாவிட்டபுரம் - தச்சன்காடு சிறிலங்கா இராணுவ மினி முகாம் தாக்குதலின் போது வீரச்சாவெய்திய,

**ராசன்** (யோசப் ராஜேந்திரன் - பாடுமீன் வீதி- மட்டு)

**கிர்த்தி** (தம்பிப்பிள்ளை சங்கரன் - செங்கலடி-மட்டு)

**லெப்.மரிக்கார்** (செல்லமாணிக்கம் ரதீஸ்வரன் - பெரியகுளம், நெடுங்கேணி - மணலாறு)

**டில்லி** (தேவதாஸ் சாம்சன் - கற்சிலைமடு - ஒட்டிசுட்டான்)

**2-ம் லெப்.ரோம்** (முத்துலிங்கம் கிருஷ்ணமூர்த்தி - பதுளை

**மேஜர் சஞ்சிகா** (கலைச்செல்வி சுந்தரராஜன் - ''குறளகம்'' கரவெட்டிகிழக்கு - யாழ்)

**கப்டன் அருந்ததி** (சிவரஞ்சினி சண்முகநாதன் - அம்பாள் வீதி, நாயன்மார்கட்டு - யாழ்)

**லெப். காஞ்சனா** (சறோசினி கணபதிப்பிள்ளை - காந்தி வீதி - வல்வெட்டித்துறை)

**2-ம்லெப். அன்றா** (நாகமுத்து திரவியநாதன் - புன்னாலைக்கட்டுவன் தெற்கு - யாழ்)

**சேகர்** [நித்தியானந்தன் அன்புக்குமரன் - இணுவில் கிழக்கு - யாழ்]

**ஈசன்** (சுப்பிரமணியம் சங்கர் அரியாலை கிழக்கு - யாழ்)

**பாஞ்சாலன்** [சற்குணம் மாதவன் - மணற்பதி, கரவெட்டி - யாழ்)

**கார்த்திக்** (சிதம்பரநாதன் கோணேஸ்வரன் - பொற்பதி வீதி, கொக்குவில் கிழக்கு - யாழ்)

சிறிலங்கா இராணுவத்தினருடனான நேரடிச் சமரில் வீரச்சாவெய்திய,

**சுனில்** [அருளைநாயகம் - கோணாவில், அக்கரைப் பற்று - அம்பாறை]

**ராஜன்** (கார்த்திகேசு ரவி - சஞ்சிகுடிச்சாறு -மட்டு]

கும்புறுப்பிட்டிப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான நேரடிச்சமரில் வீரச்சாவெய்திய,

**2.ம் லெப். கோணேஸ்** (தி. கோணேஸ்வரன் - நிலாவெளி - திருமலை]

1992ஆம் ஆண்டு அம்பாறை - வொறப்பனை விமானப்படையினர் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய-

**கப்டன் சத்தியராஜன்-ரேகன்** (சண்முகநாதன் பாஸ்கரன் - அக்கரைப்பற்று - அம்பாறை)

**லெப். சங்கரதாசன் குயிலி** (இராமசாமி செல்வம் - சந்திவெளி - மட்டு)

**குழந்தைவேல்-உதயன்** (வீரக்குட்டி சந்திரசேகரம் - இலுப்பையடிச்சேனை - மட்டு)

1993ஆம் ஆண்டு மட்டு- தம்பன்கேணிப் பகுதியில் சிறிலங்கா இராணுவம் மேற்கொண்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையின் போது வீரச்சாவெய்திய-

**பரமகுமார்** [தம்பிராசா சந்திரகுமார் - தேற்றாதீவு - 01- மட்டு)

இத்தினம் தமிழீழ எல்லைக்குட்பட்ட பிரதேசங்களிலும் கடற்பரப்பிலும் சிறிலங்காப்படையினராலும் இந்தியப்படையினராலும் கொல்லப்பட்ட தமிழ்ப்பொதுமக்கள்;

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்

★ இக்குறியிடப்பட்ட மாவீரர் ஈரோஸ் அமைப்பு இயங்கிய காலத்தில் அதனுடன் இணைந்து செயற்பட்டவராவார்;

**தமிழீழ விடுதலைப்புலிகள்**

(சி10638]

# விலங்கியல் A/L — மாணவர் அரங்கு

## 94 A/L வினாத்தாள் பற்றிய நோக்கு

விலங்கியல் வினாத்தாளில் மூன்று பகுதிகள் அமைகின்றன. பல்தேர்வு வினாக்கள், அமைப்புக் கட்டுரை வினாக்கள், கட்டுரை வினாக்கள் என்பவையாகும். இவற்றில் அமைப்புக் கட்டுரை வினாக்களை விட கட்டுரை வினாக்களில் குறைந்தளவு புள்ளிகளை மாணவர்கள் பெறுகின்றனர். இதற்குக் காரணம் பரீட்சை வினாக்களைப் பகுத்தறிதல், விடைகளின் ஒழுங்கமைப்பு வினாக்களில் விடைகளின் நீட்சி, பரீட்சகர் எதனை எதிர்பார்க்கின்றார் என்பதை மாணவர்கள் உணராமை மேல் குறிப்பிட்ட விடயங்களை மாணவர்கள் கருத்தில் கொண்டு விடையளிப்பின் விலங்கியல் பாடத்தில் சிறந்த பெறுபேறுகளைப் பெற முடியும்.

இக் கட்டுரையில் முதலில் அமைப்புக் கட்டுரை வினாக்களை நோக்கிய பின்னர் கட்டுரை வினா பற்றி விரிவாக விளக்கப்படும்.

அமைப்புக் கட்டுரை வினாக்களுக்குரிய விடை அளவாக எழுதுவதுடன் புத்திசாலித்தனமாக எழுதுதல் வேண்டும். தேவையற்ற விடைகள் எழுதும்போது கிடைக்கக் கூடிய புள்ளிகளைஇழக்கவும்நேரிடலாம். வினாக்களை அவதானமாக வாசித்து விடையளித்தல் வேண்டும்.

இங்கு கொடுக்கப்படும் வினாக்களுக்கு விடை எவ்வாறு அமைதல் வேண்டும் எனவும் மாணவர்கள் எவ்வாறான பிழையான விடைகளைக் கொடுத்து புள்ளிகளை இழந்தார்கள் என்பதும் குறிப்பிடப்படுகின்றது.

முதலாவது அமைப்புக் கட்டுரை வினாவில்

**A. [i] ஆரைச் சமச்சீர் என்றால் என்ன?**

விடையாக - எந்த ஆரையூடாக வெட்டும்போது இரு சமபாதி அல்லது எந்த மத்திய நடுக்கோட்டு நீள் அச்சினூடாக வெட்டும்போது இரு சமபாதி அல்லது உடலின் பிரிவு இரு ஆடி விம்ப அரைவாசி என அமைதல் வேண்டும். அநேக மாணவர்கள் இவ் வினாவுக்கு எந்த தளத்தினூடாக வெட்டும்போது இரு சமபாதி எனக் குறிப்பிட்டிருந்தனர். இதற்கு புள்ளிகள் வழங்கப்படவில்லை.

(ii) ஆரைச் சமச்சீர் காட்டும் விலங்குக் கூட்டம் ஒன்றின் பெயரைத் தருக?

விடையாக - Coelenterata / Echinodermata Phylum தவிர்ந்த Classes கொடுத்தாலும் புள்ளிகள் வழங்கப்பட்டன, இவ் வினா விலங்குக் கூட்டம் எனக் குறிப்பிடப்பட்டதால் விடை தமிழில் அமைந்தாலும் புள்ளி வழங்கப்பட்டது ஆங்கிலத்தில் எழுதி Spelling பிழை விட்டாலும் புள்ளிகள் வழங்கப்பட்டது

(iii) முற்பக்க அந்தத்தையும் பிற்பக்க அந்தத்தையும், முதுகுப்புற மேற்பரப்பையும், வயிற்றுப்புற மேற்பரப்பையும் கொண்ட உடலை உடைய விலங்கு சமச்சீரைக் காட்டும்?

விடை - இருபக்கச் சமச்சீர். அநேக மாணவர் சரியான விடையைக் கொடுத்திருந்தனர். ஒரு சிலர் ஆரைச் சமச்சீர் எனக் குறிப்பிட்டு புள்ளிகளை இழந்திருந்தனர்,

iv) உடற்குழி என்றால் என்ன?

விடை - முழுமையாக இடைமுதலுருப் படையால் சூழப்பட்ட குழி இவ் விடை தவிர்ந்த வேறு விடை எவை கொடுத்தாலும் புள்ளிகள் வழங்கப்படவில்லை. சில மாணவர்களின் விடையில் உடலின் உள் அமைந்த குழி, உடற் சிவருக்கும் உணவுக் கால்வாய்க்கும் இடையே அமைந்த குழி எனக் குறிப்பிடப்பட்டிருந்தது. இவ் விடைகளுக்கு எந்தப் புள்ளியும் வழங்கப்படவில்லை. மாணவர்கள் இது போன்ற வினாக்களுக்கு எவை கட்டாயமாக வர வேண்டும் என்பதை யோசித்து விடை எழுத முயற்சிக்க வேண்டும்.

v) கூர்ப்பின் போது முதலிலே உடற்குழியைக் காட்டிய பிரதான விலங்குக் கூட்டம் Phylum ஐச் சேர்ந்தது.

> 94 ஆம் ஆண்டு நடைபெற்ற விலங்கியல் பரீட்சையில் விடைத்தாள் திருத்தும் பரீட்சகராக கடமையாற்றிய தன் காரணமாகவும் கடந்த நான்கு வருடங்களாக பரீட்சகராக கடமையாற்றிய அனுபவங்கள் மூலமும் மாணவர்கள் வினாக்களுக்கு விடையளிக்கும் முறையையும் விடைகளில் எவ்வாறான பிழைகள் ஏற்பட்டு புள்ளிகளை இழக்கின்றனர் என்பதையும் 94-ம் ஆண்டு விலங்கியல் வினாத்தாளைஅடிப்படையாக கொண்டு இக் கட்டுரையில் விளக்குகின்றேன் பரீட்சை எடுத்த மாணவர்களுக்கும் இது பெரிதும் பயனுடையதாக அமையும்.
>
> -ஆசிரியர்

விடை - Annelida இவ்விடை கட்டாயம் ஆங்கிலத்தில் எழுத வேண்டும் காரணம் Phylum எனக் குறிப்பிடப்பட்டதால் Spelling ஒன்று தானும் பிழையாக அமையுமாயின் புள்ளிகள் வழங்கப்படவில்லை.

சில மாணவர்கள் வினாவைத் தவறாக விளங்கி விடையாக Nematoda வை கொடுத்திருந்தார்கள். இது போலி உடற்குழி கொண்டது. வினாவில் முதல் உடற்குழி என்பது இவ்விடையைக் கொடுக்க காரணமாக அமையலாம். ஆனால் புள்ளிகள் வழங்கப்படவில்லை.

**B. பின்வரும் கூட்டங்கள் ஒவ்வொன்றுக்கும் தனித்துவமான ஒவ்வொரு கட்டமைப்பு அம்சத்தைத் தருக.**

1) Coelenterata :- அழன்மொட்டுச்சிறைப்பை
2) Plotyhelminthes ;- சுவாலைக்கலம்
3) Mollusca :- வறுகி / தசை செறிந்த பாதம் / உடலகத் திணிவு / உடல் தலை, உடலகத் திணிவு, தசை செறிந்த பாதம் என பிரிவு.
4) Avs :- இறகு / அலகு / காற்றிடைவெளியென்பு / வலது தொகுதியில்
5) Echinodermata ;- நீர்க்கலன் தொகுதி /குழாய்க்கால்தவாளிப்பு/தாய்க் கற்றகடு / குழாய் பாதம் / புன் பாதம்

இவ்வினாக்களில் மேல் கொடுக்கப்பட்ட விடைகள் புள்ளியிடல் திட்ட (Marking Scheme) த்தில் கொடுக்கப்பட்டது இவை இருந்தால் மாத்திரம் புள்ளிகள் வழங்கப்பட்டது. வேறு விடைகள் கொடுக்கப்படும்போது புள்ளிகள் வழங்கப்படவில்லை.

இவ்வினா தனித்துவமான ஒவ்வொரு கட்டமைப்பு அம்சம் எனக் கேட்கப்பட்டதால் அக்கூட்டத்தில் மட்டும் இருக்கும் இயல்பு கொடுக்கவேண்டும் சரியான விடையுடன் பிழையான விடைகொடுக்கும் போது புள்ளிகள் வழங்கப்படவில்லை உதாரணம் Coelenterataவுக்கு அழன் மொட்டும் சிறப்பை மட்டுமே விடையாக்கும். இதற்கு 5 புள்ளிகள் வழங்கப்பட்டது இவ் அழகன் மொட்டுச் சிறைப்பையுடன் இரு மூலவுயிர்ப்படை எனக் கொடுக்கப்பட்டிருப்பின் சரியான விடையுடன் பிழையான விடையும் இருப்பதால் புள்ளிகள் இல்லாமல் போகின்றது இங்கு இரு மூலவுயிர்ப்படை Poriferaவிலும் காணப்படும் இயல்பாகும். ஆனால் வேறு உதாரணத்தில் இரு விடைகள் கொடுக்கும்போது அவை இரண்டும் சரியாக அமையின் புள்ளிகள் வழங்கப்படும் Ayes-ல் இறகு, அலகு என இரண்டும் சரியானது எனவே முழுப் புள்ளிகள் 5 வழங்கப்படும்

இவ்வினாவை மாணவர்கள் உற்று நோக்கி விடை கொடுக்கவேண்டும் ஒவ்வொன்று என கேட்கப்படும் போது ஏன் மேலதிகமானதை கொடுக்க வேண்டும்? தேவையில்லாமல் ஏன் புள்ளி இழக்க வேண்டும் இவ் இடங்களில் புத்தி சாலித்தனமாக விடையளிக்க பழகிக் கொள்ள வேண்டும்.

**C. கீழே தரப்பட்டுள்ள விலங்குகளில் சுவாசக்கட்டமைப்பு, கழிவுக்கட்டமைப்பையும் கூறுக**

| | சுவாசக் கட்டமைப்பு | கழிவுக் கட்டமைப்பு |
|---|---|---|
| 1. மண்புழு | மூடுபடை/கவசம்/ உடற்சுவர்/மேற்றோல் | கழிநீரகம் |
| 2. இறால் | பூக்கள் | பசுஞ்சுரப்பி/ உணர்கொம்புச் சுரப்பி |
| 3. திமிங்கிலம் | நுரையீரல் | சிறுநீரகம்/அனுக் கழிநீரகம் |
| 4. தோட்ட நத்தை | நுரையீரல் பூநுரையீரல் | சிறுநீரகம்/கழிநீரகம் |
| 5. முதலை | நுரையீரல் | சிறுநீரகம் அனுக் கழிநீரகம் |

மண்புழுவில் சுவாசக்கட்டமைப்பு தோல் எனக் குறிப்பிட்டால் புள்ளிகள் வழங்கப்படவில்லை இங்கு Epidermis) மேற்றோல் என்பதே சரியானது. கழிவுக்கட்டமைப்பு கழிநீரகம் அல்லது சோடிக்கழிநீரகம் எனக்கொடுக்கும் போது மட்டும் புள்ளிகள் வழங்கப்பட்டன தோட்ட நத்தை நுரையீரல் என்பதற்கு மட்டும் புள்ளிகள் வழங்கப்பட்டது இது பிரதான சுவாசக் கட்டமைப்பு ஆகும் அனேக முள்ளென்பு அந்த (Invertebrata) விலங்குகளுக்கு களிநீரகம் கழிவகற்றலுக்குரியது ஆனால் முள்ளென்பு உடையவைக்கு (Vertebrata) சிறுநீரகம் அல்லது எவ்வகைக்குரியது எனக் குறித்தல் வேண்டும் அதாவது முன்கழிநீரகம் (Pronephros) இடைக்கழிநீரகம் (Mesonephros) அனுக்கழிநீரகம் (Meta nephros) எனக் குறிப்பிடலாம்.

**D (1) இனம்என்றால் என்ன?**

ஒரு கூட்ட உயிரங்கிகள் (மற்றைய எல்லா கூட்டத்திலும் ஒரு இயல்பில் தானும் வேறுபட்டு) இனக் கலப்பில் வளமுடைய எச்சத்தை உருவாக்குமாயின் அவை இனம் எனப்படும்

இவ்வினாவுக்கு பெரும்பாலான மாணவர்கள் சரியான விடையளித்திருந்தனர் இதுபோன்ற வின கடந்த காலங்களில் மீண்டும் மீண்டும் வினாக்களாக கேட்கப்பட்டிருந்தது ஆனால் தற்போது நவீன ஆராய்ச்சிகளில் வேற்று இன அங்கிகளை கலந்து வளமுடைய எச்சத்தைப் பெறுகின்றார்கள் எனவே இனம் என்பதற்கு மற்றையை எல்லாக் கூட்டத்திலும் ஒரு இயல்பில் தானும் வேறுபட்டது என்பதை இனி வருங்கால வினாக்களின் விடையாக மாணவர்கள் சேர்க்கும் போது மட்டும் புள்ளிகளைப் பெறக் கூடியதாக இருக்கும்.

(ii) மாணவன் ஒருவன் மனிதனின் விஞ்ஞானப் பெயரை HomoSapiaens என எழுதியிருந்தான் இதனை இரு சொற் பெயரிட்டு விதிக்கேற்ப திருத்தமாக எழுதுக

விடை Homo Sapiens

சில மாணவர்கள் Homo Sapiens Sapiens எனக் குறிப்பிட்டிருந்தனர் வினா இரு சொற் பெயரீடு ஆனால் அதை அவதானியாது முச் சொல் பெயரீடு கொடுத்து புள்ளிகளை இழந்துள்ளனர் கீழே போடப்படும் கோடு ஒரே கோடாக அமையும் போதும் புள்ளிகள் வழங்கப்படவில்லை. Italics letters எழுதிய வைக்கும் புள்ளிகள் வழங்கப்படவில்லை காரணம் அவைPrinted க்கு மாத்திரம்

iii அமைப்பொத்த கட்டமைப்புக்கள் என்பவை யாவை?

**திரு. R ஈஸ்வாதாசன்**
B. Sc (Cey) Dip in Ed
(விலங்கியல் ஆசிரியர் - யாழ் இந்துக் கல்லூரி)

விடையாக பொதுவான மூதாதையர் இருந்துபெறப்பட்ட கட்டமைப்புக்கள் அல்லது ஒரே மூலவுயிர்ப்படை உற்பத்தி ஒரே அடிப்படையான கட்டமைப்பையும் உடையவை.

அநேக மாணவர்கள்இவ் வினாவுக்குரிய விடையை பொருத்தமாக எழுதவில்லை இதனால் புள்ளிகள் இழந்திருந்தனர்

iv பதாங்க அங்கங்கள் என்பவை யாவை?

கூர்ப்பு பாதையில் முன்பு தொழிற்பட்டு தற்போது தொழிற்படாத அங்கம் அளவில் குன்றி தொழிற்படாத அங்கம்

இவ் வினாவுக்கும் மாணவர்கள் போதியவிளக்கமாக விடையளிக்கவில்லை இதனால் புள்ளிகளை முழுமையாக பெற முடியாதிருந்தது

v மனிதனில் பதாங்க அங்கம் ஒன்றின் பெயரைத் தருக

குடல் வளரி

வேறு எவ்விடைக்கும் புள்ளி வழங்கப்படவில்லை காரணம் மனிதனில் இது மட்டுமே அங்கம் மற்றைய பதாங்கங்கள்அங்கம் அல்ல- அதாவதுஇழையத்தினால் ஆக்கப்பட்டவையே அங்கமாகும்

(தொடரும்)

---

# தூயகணிதம் A/L

## PURE MATHEMATICS

## நிகழ்தகவுக் கொள்கை

[Probability Theory]

### அலகு 2 - நிகழ்தகவு

(தொடர்ச்சி)

### நிகழ்தகவின் வரைவிலக்கணம்

ஒரு பரிசோதனையுடன் சேர்ந்த மாதிரி வெளி S என்க. S இலுள்ள ஒவ்வோர் நிகழ்ச்சி E இற்கும் பின்வரும் வெளிப்படையுண்மைகளைத் திருப்தி செய்யுமாறு ஒரு எண் p (E) வழங்கப்படுமானால் அவ் எண் E இன் நிகழ்தகவு எனப்படும்,

வெளிப்படை உண்மைகள்

i) S இலுள்ள ஒவ்வோர் நிகழ்ச்சி E இற்கும் $0 \leq P(E) \leq 1$

ii) $P(S) = 1$

iii) $P(\bigcup_{i \in N} E_i) = \sum_{i \in N} p(E_i)$ $\forall E_i \cap E_j = \phi$ i சமனன்று j

### நிகழ்தகவு பற்றிய தேற்றங்கள்

**தேற்றம் 1**

ஓர் இயலா நிகழ்ச்சியின் நிகழ்தகவு பூச்சியமாகும்.

நிறுவல்:

மாதிரிவெளி S இல் A, $\phi$ எனும் நிகழ்ச்சிகளைக் கருதுக.

$A \cap \phi = \phi$

$\therefore P(A \cup \phi) = P(A) + P(\phi)$ வெ.உ [iii]

ஆனால் $A \cup \phi = A$

$\therefore P(A) = P(A) + P(\phi)$

$\therefore P(\phi) = 0$

அஃதாவது இயலா நிகழ்ச்சியின் நிகழ்தகவு பூச்சியமாகும்.

உ+ம்: சதுரமுகித் தாயக்கட்டையொன்றை எறிதலின் எண் 7 ஐப் பெறுவதற்கான நிகழ்தகவு பூச்சியமாகும்.

**தேற்றம் 2**

மாதிரிவெளி ஒன்றில் வரையறுக்கப்பட்ட நிகழ்ச்சியொன்றினதும் அதன் நிரப்பு நிகழ்ச்சியினதும் நிகழ்தகவுகளின் கூட்டுத்தொகை ஒன்றிற்குச் சமனாகும்.

நிறுவல்:

மாதிரி வெளி Sஇல் வரையறுக்கப்பட்ட ஒரு நிகழ்ச்சி A என்க: இதன் நிரப்பு நிகழ்ச்சி $A^1$

$A \cap A^1 = \phi$

$\therefore P(A \cup A^1) = P(A) + P(A^1)$ வெ.உ: (iii)

ஆனால் $A \cup A' = S$ என்பதால்

$P(A \cup A^1) = P(S) = 1$ வெ.உ: (ii)

$\therefore 1 = p(A) + p(A^1)$

அ—து $p(A) + P(A^1) = 1$

குறிப்பு: நிகழ்ச்சியொன்றின் நிகழ்தகவு p ஆயின் அது நிகழாமைக்கான நிகழ்தகவு 1-p ஆகும்.

உ+ம்குறிப்பிட்ட ஒரு நகரத்தின்காவல்துறையினர் வெளியிட்ட தகவல்களின் அடிப்படையில் பின்வரும் புள்ளி விபரங்கள் பதியப்பட்டுள்ளன. சென்ற ஆண்டிலே காணாமல் போன மோட்டார் வாகனங்களில் 8 வீதமானவை 15 அல்லது கூடிய வருட முதிர்ச்சியையும், 10 வீதமானவை 10 - 14 வருட முதிர்ச்சியையும், 15 வீதமானவை 5 - 9 வருட முதிர்ச்சியையும் 18 வீதமானவை 2-4 வருட முதிர்ச்சியையும், 20 வீதமானவை ஒரு வருட முதிர்ச்சியையும், 16 வீதமானவை ஒரு வருடத்திலும் குறைந்த முதிர்ச்சியையும் கொண்டுள்ளன. அதிகாரி ஒருவரிடம் வாகனமொன்று காணாமல் போய்விட்டது. என அறிவிக்கும்போது அவர், அது ஒரு வருடத்திலும் குறைந்த முதிர்ச்சியுடையதாக இருக்கலாம் எனக் கூறுகின்றார் எனின் அவரின் கூற்று பிழையாக இருப்பதற்கான நிகழ்தகவு யாது?

விடை: $E_1, E_2, \ldots\ldots E_6$ என்பன முறையே காணாமல் போன வாகனங்கள் 15 அல்லது கூடிய வருட முதிர்ச்சியை (10—14) வருட முதிர்ச்சியை …………, ஒரு வருடத்திலும் குறைந்த முதிர்ச்சியை கொண்ட நிகழ்ச்சிகள் என்க

முன்னைய வாகனத் திருட்டுக்களை ஏற்படுத்திய சூழ்நிலைகள் தற்போதும் மாறவில்லை என்ற எடுகோளின் அடிப்படையில் இங்கு தரப்பட்ட புள்ளி விபரங்களை நாம் நிகழ்தகவுகளாகப் பயன்படுத்தலாம்;

$\therefore p(E_1) = 0.08, \ p(E_2) = 0.10, \ \ldots\ldots \ p(E_6) = 0.16$

**சு. கிருஷ்ணகுமார்** B Sc., Dip in Ed
உடுவில் மகளிர் கல்லூரி

$E_6$ நிகழாவிட்டால் அவரின் கூற்று பிழையாகும்.

எனவே அவரின் கூற்று பிழையாக இருப்பதற்கான நிகழ்தகவு

$p[E^1_6] = 1 - P[E_6]$
$= 1 - 0.16$
$= 0.84$

**தேற்றம் 3**

மாதிரி வெளி S இல் வரையறுக்கப்பட்ட இரு நிகழ்ச்சிகள் A, B இற்கு $p[A - B] = p[A] - P[A \cap B]$ ஆகும்




நிறுவல்: $A - B$, $A \cap B$ எனும் நிகழ்ச்சிகளைத் தருக

$(A-B) \cap (A \cap B) = \phi$

$\therefore p[(A-B) \cup (A \cap B)] = p(A-B) + p(A \cap B)$ வெ. உ.. (iii)

ஆனால் $(A-B) \cup (A \cap B) = A$

$\therefore p(A) = p(A-B) + p(A \cap B)$

$\therefore p(A-B) = p(A) - p(A \cap B)$

குறிப்பு: இதேபோல் $p(B-A) = p(B) - P(A \cap B)$ எனவும் நிறுவலாம்

**தேற்றம் (4)**

மாதிரிவெளி S இல் வரையறுக்கப்பட்ட A, B எனும் இரு நிகழ்ச்சிகளிற்கு

$P(A \cup B) = p(A) + P(B) - p(A \cap B)$ ஆகும்

நிறுவல்




A-B, AnB, B-A எனும் நிகழ்ச்சிகளைக் கருத $(A-B) \cap (A \cap B) \cap (B-A) = \phi$

$\therefore P[(A-B) \cup (A \cap B) \cup (B-A)] = p(A-B) + p(A \cap B) + p(B-A)$ வெ. உ. [iii]

ஆனால் $[A-B] \cup [A \cap B] \cup [B-A] = A \cup B$

$\therefore P[A \cup B] = P(A-B) + P(A \cap B) + P(B-A)$

$= p[A] - p[A \cap B] + p[A \cap B] + P[B] - p[A \cap B]$ தேற்றம் 3

$= P[A] + p[B] - p[A \cap B]$

குறிப்பு (i) $A \cap B = \phi$ எனின்

$p[A \cup B] = p[A] + p[B]$ ஆகும்;

ii $B = A$ எனின்

$P(A \cup A^1) = P(A) + P(A^1) - P(A \cap A^1)$

$p(S) = p(A) + p(A^1) - p(\phi)$

$1 = p(A) + P(A^1) - 0$

அ-து $p(A) + p(A^1) = 1$

(உ+ம்) 40 மனிதர்களைக் கொண்ட ஒரு கூட்டத்தில் 20 பேர் 35 வயதிலும் குறைந்த பொறியியலாளர்கள். 10 பேர் 35 வயதிலும் கூடிய பொறியியலாளர்கள்: 4 பேர் 35 வயதிலும் குறைந்த பொறியியலாளர் அல்லாதவர்கள். 6 பேர் 35 வயதிலும் கூடிய பொறியியலாளர் அல்லாதவர்கள். இக் கூட்டத்திலிருந்து ஒருவர் எழுமாறாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார். தெரியப்பட்டவர் பொறியியலாளர் அல்லது 35 வயதிலும் கூடிய ஒருவராயிருப்பதற்கான நிகழ்தகவு யாது?

விடை: தெரியப்பட்டவர் ஒரு பொறியியலாளர் என்பது நிகழ்ச்சி A எனவும் 35 வயதிலும் கூடிய ஒருவர் என்பது நிகழ்ச்சி B எனவும் கருதும்போது $p[A] = 30/40$, $p[B] = 16/40$. $p[A \cap B] = 10/40$

தெரியப்பட்டவர் ஒரு பொறியியலாளர் அல்லது 35 வயதிலும் கூடிய ஒருவர் என்பது AUB எனும் நிகழ்ச்சி ஆகும்.

$p[A \cup B] = p[A] + p[B] - P[A \cap B]$ என்பதால்

$= \frac{30}{40} + \frac{16}{40} - \frac{10}{40}$

$= \frac{36}{40}$

$= 0.90$

**தேற்றம் 5**

மாதிரிவெளி S இல் வரையறுக்கப்பட்ட நிகழ்ச்சிகள் A, B, C இற்கு

$p(A \cup B \cup C) = P(A) + p(B) + p(C) - p(A \cap B) - (P \cap C) - p(C \cap A) + p(A \cap B \cap C)$ ஆகும்.

நிறுவல்: $B \cup C = D$ என்க.

$p(A \cup B \cup C) = p(A \cup D)$
$= p(A) + p[D] - P(A \cap D)$
$= p(A) + p(B \cup C) - p[A \cap (B \cup C)]$
$= p(A) + p(B) + p(C) - p(B \cap C) - p[(A \cap B) \cup (A \cap C)]$
$= p(A) + p(B) + p(C) - p(B \cap C) - [p(A \cap B) + p(A \cap C) - P[(A \cap B) \cap (A \cap C)]]$

$P(A \cup B \cup C) = p(A) + P(B) + p(C) - p(B \cap C) - p(A \cap B) - P(A \cap C) + p(A \cap B \cap C)$

குறிப்பு- i] A, B, C என்பன சோடியாக[pairwise தம்முள் புறநீக்குவன எனின் (பொதுவான விளைவுகள் இல்லை எனின்]

$p(A \cup B \cup C) = p(A) + P(B) + p(C)$ ஆகும்:

ii] மேற்தரப்பட்ட தேற்றம் மூன்று நிகழ்ச்சிகளுக்கு மேலும் விரிக்கப்படலாம்

அத்துடன் $A_1$ $A_2$ ... $A_n$ எனும் நிகழ்ச்சிப் பிரிவுகளில் எந்த இரு நிகழ்ச்சிகளுக்கும் பொதுவான விளைவு இல்லை எனின்

$p(A_1 \cup A_2 \cup \ldots \cup A_n) = p(A_1) + p(A_2) + \ldots + p(A_n)$ ஆகும்

உ+ம் ஒரு சர்வதேசக் குழுவில் 61% ஆன அங்கத்தவர்கள் ஆங்கிலமொழி பேசக் கூடியவர்கள்; 51% இனருக்கு பிரெஞ்சு மொழியும், 55% இனருக்கு ஜேர்மன் மொழியும் பேசக் கூடியதாக உள்ளது 32% த்தினர் ஆங்கிலம் பிரெஞ்சு ஆகிய இருமொழிகளும் பேசக் கூடியவர்களாயிருக்க, 31% த்தினர் ஆங்கிலம், ஜேர்மன் ஆகிய இரு மொழிகளையும். 39%த்தினர் பிரெஞ்சு, ஜேர்மன் ஆகிய இருமொழிகளையும் பேசக் கூடியவர்களாவர். 20% ஆன மக்கள் மூன்று மொழிகளையும் பேசக் கூடியவர்கள்.

குழுவில் ஒரு அங்கத்தவர் எழுமாறாகத் தெரியப்பட்டால் அவர் குறைந்த பட்சம் ஒரு மொழியாகுதல் பேசக்கூடியவராக இருப்பதற்குரிய நிகழ்தகவைக் காண்க.

விடை:

தெரியப்பட்டவர் ஆங்கிலம், பிரெஞ்சு, ஜேர்மன் ஆகிய மொழிகளை பேசக் கூடியவராக இருப்பதற்கான நிகழ்ச்சிகள் முறையே E, F, G என்க.

$p(E) = 61/100$, $P(F) = 51/100$,
$P(G) = 55/100$ $P(E \cap F) = 32/100$,
$P(F \cap G) = 39/100$. $P(G \cap E) = 31/100$
$P(E \cap F \cap G) = 20/100$

தெரியப்பட்டவர் குறைந்த பட்சம் ஒரு மொழியாகுதல் பேசக்கூடியதாக இருப்பதற்கான நிகழ்ச்சி $E \cup F \cup G$ ஆகும்.

$p(E \cup F \cup G) = P(E) + P(F) + P(G) - P(E \cap F) - P(F \cap G) - P(G \cap E) + P(E \cap F \cap G)$

$= \frac{61}{100} + \frac{51}{100} + \frac{55}{100} - \frac{32}{100} - \frac{39}{100} - \frac{31}{100} + \frac{20}{160}$

$= 85/100$

$= 0.850$

[4ஆம் பக்கம் பார்க்க ]

# கணக்கியல் A/L

பங்குடமை

பங்குடமையின் முடிவுக் கணக்கு இரண்டு பகுதிகளாக பிரிக்கப்பட்டுள்ளது.

i இலாப நட்டப் பகுதி
ii நிதி நிலைமைப் பகுதி

குறிப்பிட்ட ஆண்டில் தொழிலை நடாத்தி இலாபம் ஏற்பட்டுள்ளதா அல்லது நட்டம் ஏற்பட்டுள்ளதா என்பதை அறிவதற்கும் அவ்வாறான இலாப நட்டம் பங்காளர் இடையே எவ்வாறு பகிர்வு செய்யப்பட்டுள்ளது என்பதனை அறிவதற்காக செய்யப்படுவதாகும். இவ்விலாப நட்டப் பகுதி பின்வரும் கணக்குகளாகப் பிரிக்கப்படுகின்றது

i வியாபார இலாப நட்டக் கணக்கு
ii இலாப நட்டப் பகிர் கணக்கு

தனி நபர் அமைப்பில் என்ன நோக்கத்திற்காக என்ன விபரங்களை கொண்டு எவ்வாறு வியாபார இலாப நட்டக் கணக்கு செய்யப்பட்டதோ அதே நோக்கத்திற்காக அதே விபரங்களைக் கொண்டு அவ்வாறே பங்குடமையிலும் வியாபார இலாபநட்டக் கணக்கு செய்யப்படுகிறது.

குறிப்பிட்ட ஆண்டில் ஏற்பட்ட இலாபம் அல்லது நட்டமானது பங்காளர் இடையே எவ்வாறு பகிர்வு செய்யப்பட்டுள்ளது. என்பதனை அறிவதற்காக செய்யப்படும் கணக்கே இலாப நட்டப் பகிர் கணக்கு ஆகும் இந்த இலாப நட்டப் பகிர் கணக்கில இடம் பெறும் அம்சங்கள் வருமாறு

i பொது ஒதுக்கம்
ii மூலதன வட்டி
iii பங்காளர் சம்பளம்
iv பங்காளர் கடன் வட்டி
v பங்காளர் பற்று வட்டி
vi இலாபம் அல்லது நட்டம்

பங்காளர் மூலதனக்கணக்கு என்பது பங்காளருக்கு ஆரம்பத்தில் எவ்வளவு மூலதனம் இருந்து அம்மூலதனத்துடன் பங்காளருக்கு சேர வேண்டிய உரிமைகளான மூலதனவட்டி, பங்காளர் சம்பளம், பங்காளர்கடன் வட்டி, இலாபத்தினைக் கூட்டி பங்காளரின் செலுத்துகைகளான பங்காளர் பற்றுக்கள், பற்று வட்டிக்கள், நட்டங்களைக் கழிக்க வருவது வருட இறுதி மூலதனம் ஆகும். இவ் இறுதி மூலதனத்தை அறியவே பங்காளர் மூலதனக் கணக்கு தயார் செய்யப்படுகிறது. இவ் இறுதி மூலதனமே ஐந்தொகையில் காட்டப்படும். ஐந்தொகையில் மூலதனச் செம்மையாக்கல் இடம் பெறமாட்டாது.

## இலாப நட்டப்பகிர் கணக்கும் பங்காளர் மூலதனக் கணக்கும் தயார் செய்யும் முறை

வியாபார இலாப நட்டக் கணக்கு தயார் செய்துதேறிய இலாபமாயின் இலாபநட்டப் பகிர் கணக்கில் செலவுவைக்க வேண்டும். தேறிய நட்டமாயின் இலாப நட்டப் பகிர் கணக்கில வரவு வைக்கவேண்டும்.

பங்காளர் மூலதனக்கணக்கு தயார் செய்து அவர்களது ஆரம்பமீதியை செலவுவைக்க வேண்டும். பங்காளர் காசு சரக்குகளைப் பற்றி இருப்பின் மூலதனக் கணக்கில் வரவு வைக்க வேண்டும்.

மேற் கூறியவாறு செய்யப்பட்ட பின்வரும் அம்சங்களைப் பதிவு செய்யவேண்டும்

i மூலதன வட்டி.
★ இலாப நட்டப் பகிர் கணக்கு வரவு
பங்காளர் மூலதனக் கணக்குச் செலவு

ii பங்காளர் சம்பளம்
★ இலாப நட்டப் பகிர் கணக்கு வரவு
பங்காளர் மூலதனக்கணக்கு செலவு

iii பங்காளர் கடன் வட்டி
★ இலாப நட்டப் பகிர்கணக்கு வரவு
பங்காளர் மூலதனக்கணக்கு செலவு

iv பற்றுவட்டி
★ பங்காளர் மூலதனக்கணக்கு வரவு
இலாப நட்டப் பகிர்கணக்கு செலவு

V பொது ஒதுக்கம்
★ இலாப நட்டப் பகிர் கணக்கு வரவு
பொது ஒதுக்கக் கணக்கு செலவு

பொது ஒதுக்கக் கணக்கில் செலவு வைக்கப்பட்ட தொகையை ஐந்தொகையில் ஒதுக்கப் பகுதியில் காட்டப்படல் வேண்டும்.

மேற் கூறப்பட்டவாறு செய்யப்பட்ட பின் இலாப நட்டப் பகிர் கணக்கை சமப்படுத்தும் போது பகிருக்குரிய இலாபம் அல்லது நட்டம் அறியப்படும் இதனை இலாப நட்ட விகிதாசாரத்தில் பங்காளர் மூலதனக் கணக்கிற்கு மாற்றுதல் வேண்டும் இலாபம் ஆயின்

★ இலாப நட்டப் பகிர் கணக்கு வரவு
பங்காளர் மூலதனக் கணக்கு செலவு

நட்டம் ஆயின்

★ பங்காளர் மூலதனக் கணக்கு வரவு இலாப நட்டப் பகிர் கணக்கு செலவு

மேற் கூறியவாறு செய்த பின் பங்காளர் மூலதனக் கணக்கை சமப்படுத்துவதற்கு முன்னர் பின்வரும் இரு விடயங்களை கருத்தில் கொண்டு மூலதனக் கணக்கில் பதிவு செய்ய வேண்டும்,

i பங்காளருக்காக நிறுவனம் கொடுத்தது
மூலதனக் கணக்கில் வரவு வைக்க வேண்டும்

ii நிறுவனத்திற்காக பங்காளர் கொடுத்தது மூலதனக் கணக்கில் செலவு வைக்க வேண்டும்

இவ்வாறு செய்யப்பட்ட பின் பங்காளர் மூலதனக் கணக்கை சமப்படுத்தும் போது பங்காளருடைய இறுதி மூலதனம் அறியப்படும் இதனையே ஐந்தொகையில் மூலதனமாகக் காட்டுதல் வேண்டும்

பங்காளர் உள்ளீடு செய்த மூலதனமானது நிலையானதாக இருக்க வேண்டும் என ஒப்பந்தத்தில் குறிப்பிட்டிருப்பதும் உண்டு. இவ்வாறு கூறப்பட்டிருப்பின் பங்காளருக்கு சேர வேண்டிய மூலதன வட்டி, சம்பளம, கடன் வட்டி, இலாபம் என்பவற்றையும் செலுத்துகைகளான பற்று, பற்றுவட்டி. நட்டங்கள் என்பவற்றையும் எங்கு பதிவது என்று ஒரு பிரச்சினை எழும் இப்பிரச்சினையைத் திர்ப்பதற்கு ஒவ்வொரு பங்காளரது பெயரிலும் முதலின்று இறுதியில் ஆரம்பிக்கப்படும்' கணக்கே பங்காளர் நடைமுறை கணக்கு ஆகும். பங்காளர் மூலதனக் கணக்கில் எவ்வாறு பதிவுகள் செய்தோமோ அவ்வாறே நடைமுறை கணக்கிலும் பதிவு செய்ய வேண்டும். அதாவது மூலதன வட்டி, சம்பளம், கடன் வட்டி, இலாபம் என்பன நடைமுறைக் கணக்கில் செலவிலும் பற்றுக்கள், பற்று வட்டி நட்டங்கள், என்பவற்றை நடைமுறைக் கணக்கில் வரவிலும் பதிய வேண்டும். நடைமுறைக் கணக்கை சமப்படுத்தி மீதி அறியும் போது இறுதி மீதியானது வரவு மீதியாகவும் செலவு மீதியாகவும் வரலாம்

நடைமுறைக் கணக்கு மீதி செலவு மீதியாயின் ஐந்தொகையில் மூலதனத்தின் கீழ் தனிப்படக் காட்ட வேண்டும் நடைமுறை கணக்கு மீதி வரவு மீதியாயின் ஐந்தொகையில் நடைமுறைச் சொத்தாக காட்டப்படல் வேண்டும்.

பங்காளர் பற்று வட்டி, கணிப்பிடும் போது பின்வரும் விபரங்களை கருத்திற் கொள்ள வேண்டும்

i பங்காளர் ஒரே நேரத்தில் முழுமையாகப் பற்றுவதில்லை.
ii பங்காளர் மாதம் தோறும் குறிப்பிட்ட நிலையான தொகையைப் பற்றிக் கொள்வர்
iii பங்காளர் மாத ஆரம்பத்தில் அல்லது மாத நடுப் பகுதியில் அல்லது மாத இறுதி பகுதியில் தொடர்ச்சியாகப் பற்றிக்கொள்வர்

பற்றுவட்டிக் கணிப்பீட்டிற்கு பின்வரும் சூத்திரங்கள பயன்படுத்தப் படுகின்றன

i பங்காளர் ஒருவர் மாத ஆரம்பத்தில் குறிப்பிட்ட நிலையான் தொகையை பற்றியவராக இருந்தால் அவர் ஆண்டு பூராகவும் பற்றிய மொத்தத் தொகைக்கு குறிப்பிட்ட வீதம் 6½ மாதங்களுக்கு கணித்தல் வேண்டும்.

ii பங்காளர் ஒருவர் மாத நடுப் பகுதியில் குறிப்பிட்ட நிலையான தொகையைப் பற்றியவராக இருந்தால் அவர் ஆண்டு பூராகவும் பற்றிய மொத்தத் தொகைக்கு குறிப்பிட்ட வீதம் 6மாதங்களுக்கு கணித்தல் வேண்டும்.

iii பங்காளர் ஒருவர் மாத இறுதிப்பகுதியில் குறிப்பிட்ட நிலையான தொகையைப் பற்றியவராக இருந்தால் அவர் ஆண்டு பூராகவும் பற்றிய தொகைக்கு குறிப்பிட்ட வீதம் 5½ மாதங்களுக்கு கணித்தல் வேண்டும்.

### சொத்துவிற்பனையின் பொழுது பதிவுகள் பின்வருமாறு

i விற்பனை செய்கின்ற சொத்தின் கொள் விலையை
★ சொத்து விற்பனைக் கணக்கு வரவு
குறிப்பிட்ட சொத்துக் கணக்கு செலவு

ii விற்பனை செய்கின்ற கடந்தாண்டு இறுதி வரையிலான பெறுமானத் தேய்வினை பெறுமானத் தேய்வு ஒதுக்கத்தில் இருந்து எடுத்து சொத்து விற்பனைக் கணக்கிற்கு மாற்ற வேண்டும்.
★ பெறுமானத் தேய்வு ஒதுக்கக் கணக்கு வரவு
சொத்து விற்பனைக் கணக்கு செலவு

iii நிகழ் ஆண்டு இடைக் காலத்தில் விற்கப்படுமாக இருந்தால் விற்பனை செய்கின்ற சொத்தின் இவ்வாண்டுக்கான பெறுமானத்தேய்வைக் கணித்து பதிவு செய்ய வேண்டும்.
★ பெறுமானத் தேய்வுக் கணக்கு வரவு
சொத்து விற்பனைக் கணக்கு செலவு

iv சொத்து விற்பனையால் பெறப்படுகின்ற பணத்திற்கு
★ காசுக் கணக்கு வரவு
சொத்து விற்பனைக் கணக்கு செலவு

சொத்து விற்பனைக் கணக்கை சமப்படுத்தி இலாபம் ஏற்பட்டால் அவ்விலாபத்தை இலாப நட்டக் கணக்கில் செலவு வைக்க வேண்டும். நட்டம் ஏற்பட்டால் அவ் நட்டத் தொகையை இலாப நட்டக் கணக்கில் வரவு வைக்கப் படல் வேண்டும்.

### சொத்து பகுதி மாற்றின் போது பதிவுகள் வருமாறு

i பகுதி மாற்றாகக் கொடுக்கின்ற சொத்தின் கொள் விலையை சொத்துக் கணக்கில் இருந்து எடுத்து பகுதி மாற்றுக் கணக்கிற்கு மாற்ற வேண்டும்;
★ பகுதி மாற்றுக்கணக்கு வரவு
சொத்துக் கணக்கு செலவு

ii பகுதி மாற்றாகக் கொடுக்கின்ற சொத்தின் கடந்தாண்டு இறுதி வரையிலான பெறுமானத் தேய்வினைக் கணித்து பகுதி மாற்றுக் கணக்கிற்கு மாற்ற வேண்டும்.
★ பெறுமானத் தேய்வு ஒதுக்கக் கணக்கு வரவு
பகுதி மாற்றுக் கணக்கு செலவு

iii புதிய சொத்திற்காக என்ன பெறுமானத்தில் மதிப்பிடக் கொடுக்கப்பட்டதோ அப்பெறுமானத்தில் பின்வருமாறு பதிய வேண்டும்.
★ சொத்துக் கணக்கு வரவு
பகுதி மாற்றுக் கணக்கு செலவு

iv பகுதி மாற்றாக கொடுக்கின்றசொத்தின் நிகழாண்டு பாவித்திருப்பின் நிகழாண்டுக்கான பெறுமானத் தேய்வினைக் கணித்து பதிவு செய்ய வேண்டும்.
★ பெறுமானத் தேய்வுக் கணக்கு வரவு
பகுதி மாற்றுக் கணக்கு செலவு

### பங்காளர் சேரல்

பங்குடமையில் புதிய பங்காளராக சேரும் பொழுது பின்வருவனவற்றைக் கொண்டு வருதல் வேண்டும்.

i மூலதனம்
ii நன்மதிப்பு

புதிய பங்காளர் மூலதனத்தைக் கொண்டு வரும் போது பதிவு பின்வருமாறு.

★ காசுக் கணக்கு வரவு
புதிய பங்காளர் மூலதனக் கணக்கு செலவு

புதிய பங்காளர் சேரும் போது மூலதனத்தினை சொத்தாக கொண்டுவரின்

★ குறித்த சொத்துக் கணக்கு வரவு
புதிய பங்காளர் மூலதனக் கணக்கு செலவு

-தொடரும்

அ. கிரிதரன்
விசேட பயிற்சி ஆசிரியர்
யா/யூனியன் கல்லூரி
தெல்லிப்பழை

## தூயகணிதம்

தேற்றம் 6

மாதிரி வெளி S இல் வரையறுக்கப்பட்ட நிகழ்ச்சி Aயும் அதன் உபநிகழ்ச்சி Bயும் எனின் $P(B) \leq P(A)$ ஆகும்.

நிறுவல்




நிகழ்ச்சிகள் B, AnB' என்பவற்றைக் கருதுக

$B\cap(A\cap B') = \phi$

$\therefore P[B\cup(A\cap B')] = P(B) + p(A\cap B')$

ஆனால் $B\cup[A\cap B'] = A$ — வெ உ (iii)

$\therefore p(A) = p(B) + p(A\cap B')$

ஆனால் $p(A\cap B') \geq 0$ — வெ உ (1)

$\therefore p(B) \leq p(A)$

குறிப்பு; $p[A\cap B] \leq p(A)$
$p(A\cap B) < p(B)$

]தொடரும்]


## 7-ம் ஆண்டு நினைவஞ்சலிகள்



திரு: இளையதம்பி சிவராசா
(அதிபர் யா/ந/ஞானோதயா வித்தியாலயம்)
மறைவு
19.05.1987



திருமதி சிவராசா பராசக்தி
(ஓய்வுபெற்ற ஆசிரியர் யா/ சன்மார்க்க மகா வித்தியாலயம்
மறைவு
21.10.1987

திதி: 03.11.1994

இவர்களை எண்ணி இறைவனை பிரார்த்தனை செய்கின்றோம்.

கல்வியங்காடு [9962] பிள்ளைகள்

# 4 ஆம் ஆண்டு நினைவு

புரட்சிப்பண் பாடிய புதுமைப்பெண்



## மேஜர் சஞ்சிகா

(செல்வி கலைச்செல்வி சுந்தரராஸ்)

('குறளகம்' கரவெட்டி)

பெற்றதாய் மடியில் : 18-04-1969 மண்தாய் மடியில் : 03-11-1990

நான்கு ஆண்டுகள் நகர்ந்தனவோ? நம்பமுடியவில்லையே
நேற்று நீ சிந்திய சிரிப்பின் ஒலி; காற்றில் இன்றும் கேட்கிறதே
உன் புன்முறுவலின் பிரகாசம் வான் நட்சத்திரங்களில் மின்னுகின்றதே
புலியாய் நீ நடந்து வந்தபோது உன்னில் நாம் கண்ட கம்பீரம்
இன்றும் கண்ணில்படும் பெண்புலிகளில் காண்கிறோமே!
வானத்தில் வந்திறங்கி வளவு முழுக்க, காலிற் சக்கரம் பூட்டியதுபோல்
நில்லாமல் ஒடி நடப்பாயே!
எங்களையும் குந்தியிருக்க விடாது குதிக்க வைப்பாயே!
தமிழீழம் தமிழீழம் எங்கள் தலைவர் அவர் எங்கள் அண்ணா! என்று
நீ வீடுவந்த நாட்களில் ஒருமணி நேரத்தில் ஓராயிரம் தடவை சொல்வாயே!

அம்மா சஞ்சிகா!
வீரச்சாவு எனும் ஒரு களப்பலியால்
கண்மறைந்து போய்விட்டாயே தாயே!
பிரிவுத்துயரின் வேதனைகள் யாவையும்
உன்னில் கண்டவற்றை
மீளக் காணும் முயற்சியில்
ஆற்றிடத் துடிக்கிறோம்,
தமிழீழம் எங்கள் தாய்நாடு!
தரணியில் விளங்கும் சிறப்போடு!
அன்னை தமிழின் பூரிப்பிலும்;
உன்னைக் காண்போம் உவப்போடு;

தற்போதைய முகவரி:
கரணவாய் மத்தி,
நாவலர்மடம்,
கரவெட்டி. (9930)

குடும்பத்தினர்

### சிந்தனைக்கு

மக்களிடம் ஏராளமான நம்பிக்கை உள்ளது நம்பிக்கையும் வீரமும் தேவைப்படுவது நம் அரசியற் தலைவர்களிடம் தான்.

- ரேமாண்ட் இளேப்பர்-


# ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 03- 11- 1994
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2839 நிர்வாகபீடம் 2024
தபால் பெட்டி எண் - 05


## பொ. ஐ. மு. அரசாங்கம் எண்ணுவது என்ன?

இனப்பிரச்சினை விவகாரத்தில் பிரதமர் சந்திரிகா தலைமையிலான அரசாங்கத்தின் பேச்சும், நடவடிக்கையும் சிறிது சிறிதாக மாறி வருவது போன்று சில உணர்வுகள் வெளிப்படுகின்றன. இதனை அரசாங்கத்தின் சில நடவடிக்கைகள் துலாம்பரமாக வெளிப்படுத்துபவையாகவும் உள்ளன.

இதற்கு சிறப்பானதொரு உதாரணமாகவே தடுப்புக்காவல் உத்தரவின் கீழ் காவலில் இருக்கும் கைதிகள் தொடர்பான நிலைப்பாட்டில் அரசாங்கம் செய்து கொண்டுள்ள மாற்றத்தைக் குறிப்பிட வேண்டும். இதன் பிரகாரம் தகவல் கொடுக்கத் தவறியது, உணவு வழங்கியது போன்ற குற்றச்சாட்டுகளின் பேரில் தடுப்புக்காவலில் உள்ளவர்கள் மீதான குற்றச்சாட்டை விலக்கிக் கொள்வது என்ற முடிவை அரசாங்கம் மாற்றியுள்ளது.

அரசாங்கத்தின் இம் முடிவிற்கு காமினியின் கொலையுடன் முடிச்சுப் போடப்படுகின்றது. ஆனால் இது எத்தகைய தூரம் நியாயமானது, ஏற்புடையது என்பதே கேள்வியாகும். அதாவது காமினியின் கொலைக்கும், இம்முடிவு மாற்றத்திற்கும் உள்ள தொடர்பு என்ன?

தொடர்புஇருப்பதனால்காமினிதிசாநாயக்கா கொலை செய்யப்பட்டதைத் தொடர்ந்து ஐ.தே.கட்சி 'சிறையில் இருந்து விடுதலை செய்யப்பட்ட விடுதலைப்புலிகளே இத்தாக்குதலை நடத்தினர்' என்று கூறிய குற்றச்சாட்டை அரசாங்கம் ஏற்றுக்கொண்டுள்ளதா? அல்லது சிறையில் இருந்து விடுதலை செய்யப்பட்டவர்களே காமினியைக் கொன்றார்கள் என அரசாங்கத்திற்கு விசேட தகவல்கள் ஏதும் கிடைக்கப் பெற்றுள்ளதா?

ஆனால் அரசாங்கம் இதற்கான காரணத்தை இன்னமும் கூறவில்லை. ஆயினும் திட்டவட்டமாக அவ்வாறு ஏதும் நடந்து விட வாய்ப்பில்லை. ஏனெனில் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டவர்கள் அப்பாவித் தமிழ் மக்கள் என்று மட்டும் துணிந்து கூறலாம். சிறிலங்கா இராணுவத்தினரால் இன அழிப்பிற்கென கொண்டு செல்லப்பட்டு தப்பிப்பிழைத்து சிறையில் வாடுபவர்கள். இவர்கள் எந்தவகையிலும் புலிகளுடன் சேர்த்துக் குற்றம் சாட்டப்பட முடியாத நிலையிலேயே இவ்வாறான பொதுக் குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளார்கள்.

அத்தோடு இவர்கள் சாதாரண சட்டங்கள் எவற்றின் மூலமும் தடுத்து வைக்கக் கூடிய குற்றங்களையோ, குற்றச்சாட்டுக்களையோ உடையவர்கள் அல்லர். இன ஒடுக்குமுறைக்கென விசேடமாகக் கொண்டுவரப்பட்ட பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் மூலம் மட்டுமே இவர்களைத் தடுத்து வைக்கக் கூடியதாகவுள்ளது.

இந்த நிலையில் அவர்களின் விடுதலையைத் தடுத்து வைக்க அரசாங்கம் எடுத்துள்ள முடிவானது கடந்த கால ஐ.தே.கட்சி அரசாங்கத்தைப் போன்றே இவ் அரசாங்கமும் தமிழ்க்கைதிகள் விவகாரத்தில் செயற்பட முற்பட்டுள்ளது என்பதையே காட்டுவதாகவுள்ளது. மறுவளமாகக் கூறுவதானால் பொ. ஐ. முன்னணி அரசாங்கமும் பயங்கரவாதத் தடைச் சட்டத்தை' கடுமையாக அமுல்படுத்தும் நோக்கம் கொண்டதாக இருப்பதையே வெளிக்காட்டுவதாகவுள்ளது.

இதேசமயம் காமினி திசாநாயக்காவின் கொலை தொடர்பாக பூரண விசாரணை முடிவடையும் முன்னர் எவர் மீதும் குற்றம் சாட்டவோ, பழிசுமத்தவோ போவதில்லை எனக் கூறிக் கொள்ளும் சந்திரிகா அரசாங்கம் கொலை விசாரணையில் பெரியதொரு முன்னேற்றமும் காணப்படாத நிலையில் விடுதலைப்புலிகளுக்கு உதவியவர்கள் என்ற பேரில் சிறையில் வாடும் இளைஞர்களின் விடுதலையைத் தடுத்து நிறுத்தியது ஏன்?

அரசாங்கமும் விசாரணைகள் பூரணப்படுத்தப்படமுன்னர் விடுதலைப்புலிகளே கொலையைச் செய்தார்கள் எனக்காட்ட முற்படுகின்றதா? அவ்வாறானால் சமாதானத் தீர்விற்கு இராணுவத்தரப்பில் இருந்து எழுந்துள்ள எதிர்ப்பைச் சமாளிக்க முடியாத அரசாங்கம் கொலைப் பழியை விடுதலைப்புலிகளின் மீது சுமத்திவிட்டு இனப்பிரச்சினைக்கான சமாதான தீர்வில் இருந்து ஒதுங்கிக் கொள்ளப்பார்க்கின்றதா?

ஆனால் காமினி திசாநாயக்காவின் கொலையை விடுதலைப்புலிகள் செய்தார்களா? இல்லையா? இதில் எதுவாக இருப்பினும் இதுவல்ல இங்கு விவகாரம். தடுப்புக்காவல் உத்தரவில் சிறு குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டு சிறைகளில் வாழும்தமிழர்களின் விடுதலையை அரசாங்கம் தடுத்து நிறுத்தியமையே முக்கியமானது. பயங்கரவாத தடைச்சட்டத்தை ஐ.தே.க கொண்டு வந்திருக்கலாம். ஆனால் அதனை பொ.ஐ.முன்னணி அரசாங்கம் தீவிரமாக அமுல்படுத்தினால் ஏற்படும் விளைவுகளுக்கு ஐ.தே.க. பொறுப்பல்ல.

# யாழ். பல்கலைக்கான பிரிட்டிஷ் உதவி தென்னிலங்கைக்கு திருப்பப்பட்டது

(யாழ்ப்பாணம்)

இந்திய இராணுவம் இங்கு தங்கியிருந்த காலப்பகுதியில் இந்திய இராணுவத்தினரின் தாக்குதல்களினால் சேதமடைந்த யாழ். பல்கலைக்கழக கணனி விஞ்ஞான, பௌதிக, இரசாயன பகுதிகளை புனரமைப்புச் செய்யவென பிரிட்டிஷ் அரசினால் வழங்கப்பட்ட 40 மில்லியன் பெறுமதியான பொருட்களில் 80 சதவீதமானவை தென்னிலங்கை பல்கலைக் கழகங்களுக்கு அனுப்பப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணத்திலுள்ள நிலைமையை காரணம் காட்டி பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு இவ்வுதவியை தெற்கிலுள்ள பல்கலைக் கழகங்களுக்கு மாற்றியுள்ளதாகவும், எஞ்சியுள்ள 20 சதவீதமான 8 மில்லியன் ரூபா பெறுமதியான பொருட்களே யாழ் பல்கலைக்கழக துணைவேந்தரின் முயற்சியினால் இங்கு எடுத்துவரக் கூடியதாக அமைந்துள்ளதாகவும் தெரியவருகின்றது.

யாழ் பல்கலைக்கழக துணைவேந்தர் க. குணரத்தினம் இது தொடர்பாக கொழும்பில் பிரிட்டிஷ் உயர்ஸ்தானிகரை சந்தித்து உண்மை நிலையை விளக்கி பூரணமான உதவியைத் தருமாறு கேட்டுள்ளார்.

எனினும் தீர்க்கமான முடிவு எதனையும் பிரிட்டிஷ் உயர்ஸ்தானிகர் துணைவேந்தரிடம் தெரிவிக்கவில்லை எனவும் அறியவந்துள்ளது. (பா)

## உயர் கல்வி அமைச்சர் துணைவேந்தர் சந்திப்பு

(யாழ்ப்பாணம்)

புதிய அரசின் கல்வி உயர் கல்வி அமைச்சர் ரிச்சட்பதிரண யாழ் பல்கலைக்கழக துணைவேந்தரைச் சந்தித்து யாழ்பல்கலைக்கழக நிலைமைகள் தொடர்பாக மிகவும் ஆவலாக கேட்டறிந்துகொண்டுள்ளார்.

இதன் போது யாழ் பல்கலைக்கழகத்தில் கட்டப்பட்டு குறையாகவிடப்பட்டிருக்கும் கட்டடங்களை கட்டுவது தொடர்பாக அமைச்சரிடம் துணைவேந்தர் அனுமதியையும்கோரினார் அதற்கு அமைச்சர் அரசிற்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் பேச்சுக்கள் ஆரம்பித்துள்ளன இதன் பின் தான் இதற்கான நடவடிக்கையை தாம் மேற்கொள்ள முடியும் என தெரிவித்துள்ளார்.

அத்துடன் ஏனைய விடயங்கள் தொடர்பாக பின்பு ஒரு நாளில் சந்தித்துப் பேசுவோம் என்றுகூறியிருந்தார் என யாழ் பல்கலைக்கழகதுணைவேந்தர் தெரிவித்தார்.

ஆனால் அதற்கிடையில் கிராண்பாஸ் குண்டுவெடிப்பில் காமினி திசாநாயக்கா கொல்லப்பட்டமையைத் தொடர்ந்து ஏற்பட்ட சூழ்நிலையினால் அமைச்சரை மீண்டும் சந்திப்பதற்கான சாத்தியக்கூறுகள் தென்படாததை அடுத்து தாம் யாழ்ப்பாணம் திரும்பியதாக தெரிவித்தார் [பா)

## விண்ணப்பமுடிவு நீடிப்பு

(கொழும்பு)

அரசாங்க பொது நிர்வாக சேவைக்கு ஆட்சேர்ப்பதற்கான திறந்த போட்டிப் பரீட்சை விண்ணப்ப முடிவுத் திகதி எதிர்வரும் 15ந் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஜூலை மாதம் 15ந் திகதியுடன் விண்ணப்ப முடிவுத் திகதி முடிவடைந்த போதிலும் அமைச்சரவை அங்கீகாரத்துடன் இம் முடிவு எடுக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

### வணிக விழா

[யாழ்ப்பாணம்]

யாழ் - பிறவுண் வீதியில் இயங்கி வரும் புங்குடுதீவு மகா வித்தியாலயத்தின் வணிக மாணவர் மன்றம் நடாத்தும் வணிக விழா இன்று வியாழக்கிழமை நண்பகல் 1- 30 மணிக்கு மன்ற உபதலைவர் செல்வன் பி-சதீஸ் தலைமையில் நடைபெறும் சிறப்புரைகளுடன் பட்டிமன்றம் உட்பட்ட பல கலை நிகழ்வுகளும் இடம் பெறும். [22]

## தடைகாண் பரீட்சையை யாழ். இல் நடத்த கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

''யாழ் மாவட்டத்திலுள்ள அரசாங்க வைத்தியசாலைகளில் கடமையாற்றும் மருந்துக் கலவையாளர்களுக்கான வினைத்திறமைகாண் தடைப்பரீட்சையை கொழும்பில் நடாத்துவதினால் பல்வேறு கஷ்டங்களை இவர்கள் அனுபவிக்க வேண்டியுள்ளது. இப்பரீட்சையை யாழ் நகரில் நடாத்துவதற்கு சுகாதார திணைக்களம் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று எமது யாழ் கிளைச் சங்கம் கேட்டுக்கொள்கின்றது.

இவ்வாறு கொழும்பிலுள்ள சுகாதார திணைக்கள பணிப்பாளர் நாயகத்தை கேட்டுக்கொள்ளும் தீர்மானம் ஒன்று கடந்த ஞாயிற்றுக்கிழமை (30-10-94) யன்று யாழ் நகரில் நடைபெற்ற அரசாங்க மருந்துக்கலவையாளர்கள் சங்க யாழ் கிளையின் 21 ஆவது வருடாந்த பொதுக் கூட்டத்தில் ஏகமனதாக நிறை வேற்றப்பட்டுள்ளது.

யாழ் சுகாதார திணைக்கள மாவட்ட மருந்து களஞ்சிய மேல்மாடி மண்டபத்தில் நடைபெற்ற இக் கூட்டத்தில் ஓய்வு பெற்ற யாழ் சுகாதார திணைக்கள பணிப்பாளர் பணிமனை நிர்வாக அதிகாரி திரு எஸ். ஞானரத்தினத்திற்கு சேவை நலம் பாராட்டு வைபவமும் புதிதாக பதவி ஏற்றுள்ள நிர்வாக அதிகாரி திரு செ.மகேந்திரனுக்கு வரவேற்பு உபசாரமும் சிறப்பான முறையில் நடாத்தப்பட்டது. வேறு பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டதுடன் புதுவருட நிர்வாகிகள் தெரிவும் நடைபெற்றது.

## 20 பாடசாலைகளை திருத்த நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ் வலயம்-1 கல்வித் திணைக்களத்தைச் சேர்ந்த, இராணுவ நடவடிக்கைகளினால்பாதிக்கப்பட்ட சுமார் 20 பாடசாலைகள் புனரமைப்புச் செய்யப்படவுள்ளன.

இது தொடர்பான அவசர கூட்டம் ஒன்று எதிர்வரும் 5ஆம் திகதி காலை யாழ் வலயம்-1 கல்வித்திணைக்களத்தில் நடைபெறவுள்ளது.

அண்மையில் வடக்குகிழக்கு மாகாணக்கல்வியமைச்சில் இருந்து கிடைத்த இரண்டு இலட்சம் ரூபாவில் 80 ஆயிரம் ரூபா வலயம்-1 இற்கும் 120 ஆயிரம் ரூபா வலயம் 2 இற்கும் ஒதுக்கப்பட்டிருக்கிறது.

இதன்படியே இத் திருத்த வேலைகள் விரைவில் ஆரம்பிக்கவுள்ளன என தெரியவருகிறது. (பா)

# விளம்பரம் செய்யும் உரிமை கூட சந்திரிகா அரசாங்கம் தடுத்துள்ளது

### ஐ. தே. கட்சியின் வேட்பாளர் சிறிமா கண்டனம்

(கொழும்பு)

செய்திப்பத்திரிகைகளுக்கு நான் அனுப்பும் விளம்பரங்களில் உள்ள வாக்கியங்கள் கூட தடைசெய்யப்பட்டுள்ளன தேசியப் பத்திரிகைளில் இந்த சுதந்திரத்தை தானும் பொதுஜன ஐக்கிய முன்னணி அரசாங்கம் தவிர்த்துள்ளது என ஐக்கிய தேசியக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளரான திருமதி சிறிமா திசாநாயக்கா தெரிவித்துள்ளார்.

ரூபவாஹினியில் பிரசார உரையினை நிகழ்த்தும் போது அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார் ஐக்கியதேசியக் கட்சி ஜனாதிபதி நிர்வாக முறையை நீக்க முன்வந்தும் 500 கோடி ரூபா செலவில் புதிய ஜனாதிபதி தேர்தலை நடத்தவேண்டிய தேவை ஏன் ஏற்பட்டது இதற்கு அரசாங்கம் பதில் கூற வேண்டும்

பொது மக்களுக்கு எனது நிலையை விளக்குவதற்கு கூட அரசாங்கம் எனக்கு ஏன் இடமளிக்கவில்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

## 'திவயின' செய்திகளுக்கு ரணில் கண்டனம்

(கொழும்பு)

ஐ. தே கவினுள் இடம் பெறும் நிகழ்வுகளை மட்டும் வெளிப்படுத்துவது பத்திரிகைகளின் பணியல்ல நாட்டு மக்களின் பிரச்சினைகளை வெளியிடுவதே பத்திரிகைகளின் பணியாகும் என முன்னாள் பிரதமரும் ஐ. தே. க. பிரதித் தலைவருமான ரணில் விக்கிரமசிங்க கண்டனம் வெளியிட்டுள்ளார்

ஐ தே க. உட்கட்சிப் பூசல் தொடர்பாக 'திவயின' சிங்கள நாளிதழ் வெளியிடும் தகவல்கள் தொடர்பாக கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்

# சிறிமா அம்மாவே எமக்கு வேண்டும் ரணிலை தாக்கியோர் கோஷம்

### பாதுகாப்பு அதிகாரி தர்மசிறி தெரிவிப்பு

(கொழும்பு)

சிறிமா அம்மையார் தான் எங்களுக்கு வேண்டும் (அபிட்ட சிறிமா மெடம் ஒன)என கூச்சலிட்டவாறே ரணிலின் காரை கைகளினால் தட்டினர் இவ்வாறு முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா சிறிகோத்தாவில் நடந்த செயற்குழுக்கூட்டத்திற்கு நுழையும்போது நடந்ததாக ரணிலின் பாதுகாப்பு அதிகாரியான தர்மசிறி லோரன்ஸ் விதான, மிரிகன பொலிஸ் நிலையத்தில் புகார் செய்துள்ளார்.

இதேவேளை ரணிலை தாக்க முயன்ற சிலர் அடையாளம் காணப்பட்டுள்ளதாகவும் அவர்களின் மேல் விசாரணை தொடரப்படுமெனவும் பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

## இம்மாத நடுப்பகுதியில் புதிய ஜனாதிபதி பதவிஏற்பு

(கொழும்பு)

இம்மாதம் 10 ஆம் திகதிக்கும்23 ஆம் திகதிக்கும் இடைப்பட்ட காலத்தில்புதிய ஜனாதிபதி பதவி ஏற்பார் என அரசியலமைப்பு விவகார அமைச்சர் பேராசிரியர் ஜி எல் பீரிஸ் நேற்று முன்தினம் செய்தியாளர்மாநாட்டில் தெரிவித்தார்.

புதிய ஜனாதிபதி பதவி ஏற்கும் வரை தற்போதைய ஜனாதிபதி டி.பி விஜேதுங்காவே இடைக்கால ஜனாதிபதியாக பதவி வகிப்பார் அமைச்சரவை தற்போதையஜனாதிபதி விஜேதுங்காவின் சேவையைப் பாராட்டுகின்றது என்றும் அமைச்சர் பீரிஸ் தெரிவித்தார் ஜனாதிபதியின் செயலர் கே எச் ஜே விஜயதாஸ பொதுநலவாய செயலகத்தில் பிரதி செயலாளர் நாயகம் பதவிக்கு செய்துள்ள விண்ணப்பத்தை அமைச்சரவை ஏற்றுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது

## ஒஸி தொடர்ந்தும் அபாய நிலையில்

(கொழும்பு)

கொழும்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஒஸி அபேயகுணசேகர தொடர்ந்தும் மயக்க நிலையிலேயே இருந்து வருவதாக கொழும்பில் வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

கடந்த மாதம் 24 ம் திகதி அதிகாலை கிராண்பாஸ் சந்தியில் நடைபெற்ற ஐக்கியதேசியகட்சி கூட்டத்தில் இடம்பெற்ற குண்டுவெடிப்பு சம்பவத்தின் போது படுகாயமடைந்து ஆபத்தான நிலையில் இவர் கொழும்பு வைத்தியசாலை அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டது தெரிந்ததே.

இவருக்கு டாக்டர்கள் தீவிர சிகிச்சையளித்து வருகின்ற போதிலும் இவரது உடல்நிலை மோசமாக இருப்பதாகவும் பத்து நாட்களாகியும் தொடர்ந்து மயக்க நிலையிலேயே இருந்து வருகிறார் எனவும் அவ்வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன

## கிழக்கில் மருத்துவபீடம் அமைக்க முயற்சி

யாழ்ப்பாணம்

கிழக்கு மாகாணத்தில் மருத்துவ பீடம் ஒன்றை அமைப்பதற்கு முயற்சிகள் நடைபெற்று வருவதாக கொழும்பிலிருந்துகிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன

அநேகமாக இம்மருத்துவ பீடம் மட்டக்களப்பு பல்கலைக்கழகத்துடன் சேர்ந்து ஆரம்பிக்கப்படவுள்ளதாக தெரியவருகின்றது

இதற்கென விசேட குழுவொன்று மட்டக்களப்புக்கு விஜயம் செய்துள்ளதாக தெரியவருகின்றது எனினும் இது தொடர்பாக பல்கலைக்கழகங்கள் மானியங்கள் ஆணைக்குழு நடவடிக்கையை உத்தியோகபூர்வமாக வெளியிடவில்லை என மேலும் தெரியவருகின்றது (பா)

## நிதி ஒதுக்கீடு

(கொழும்பு)

அடுத்த வருடம்ஜனவரியில் பரிசுத்த பாப்பரசர் இலங்கைக்கு மேற்கொள்ளும் விஜயத்துக்கான செலவினங்களுக்கு ஒரு கோடியே 34 இலட்சத்து 72 ஆயிரத்து 540 ரூபாவை குறைநிரப்பு மதிப்பீடாக அமைச்சரவை அங்கிகரித்துள்ளது.

இலங்கை வரும் பாப்பரசர் இரண்டு நாட்கள் இங்கு தங்கியிருப்பார்.

## ஐ.தே.கவிற்கு வாக்களிக்க ஈ.பி.டி:பி, வற்புறுத்து

(தீவகம்)

தீவகத்தில் இராணுவ பிடியில் சிக்கியுள்ள மக்களை வரப்போகும் ஜனாதிபதித் தேர்தலில் ஐக்கிய தேசிய கட்சிக்கு வாக்களிக்குமாறு ஈ பி டி பியினர் உத்தரவிட்டுள்ளனர் என அங்கிருந்து கிடைக்கும் தகவல் தெரிவிக்கின்றது.

தீவகத்தில் இராணுவ ஆக்கிரமிப்புப் பிரதேசத்தில் தங்கியுள்ள ஈ பி.டி பி குழுவினர் அங்கு சிக்கியுள்ள மக்களை அந்தந்த ஊர்களில் உள்ள பொது இடங்களுக்கு அழைத்து வர இருக்கும் ஜனாதிபதி தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியின் வேட்பாளரிற்கு வாக்களிக்குமாறு உத்தரவிட்டுள்ளனர் இவர்களின் இந்த உத்தரவைத் தொடர்ந்து மக்கள் மத்தியில் அமைதியான முணு முணுத்தலுடன் கூடிய எதிர்ப்பு உணர்வு காணப்பட்டதாக அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன. (இ.தி)

## உலகவங்கி பிரதிநிதி குழு இன்று யாழ் வருகிறது

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்ட புனர்வாழ்வு புனர்நிர்மாணம் தொடர்பாக நேரில் பார்வையிடுவதற்கு உலக வங்கியின் பிரதிநிதிகள் குழுவொன்று இன்று யாழ்ப்பாணம் வருமென எதிர்பார்க்கப்படுகின்றது

இக்குழுவினர் யாழ் மாவட்டத்தில் தங்கியிருக்கும் காலத்தில் யாழ் மாவட்டத்தின் புனர்நிர்மாணம் தொடர்பாக அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின் உயரதிகாரிகள் யாழ் மாவட்டத்தின் புனர் நிர்மாணம்பற்றிய விபரங்களை சமர்ப்பிக்கவுள்ளதாகத் தெரியவருகின்றது (சி)

## புலிகளின் குரல் நிகழ்ச்சி நிரல்

### 1994.11 03 வியாழன் இரவு

08 01 - சொல்லுகிறோம் பார்க்கலாம்.
08 10 - சித்த மருத்துவ குறிப்புகள் ' நெருப்புக்காய்ச்சல் நோய்க்கான மருத்துவம்''
8.20 - உழைப்போம் உயர்வோம் - நிகழ்ச்சியில் ''சமகாரருக்கு வேண்டும் சமக்காரர் அறிமுக அட்டை'' உரையாடல்
08 30 - செய்திகள்
08-40 - ஏட்டி விருந்து - இயற்கை, சமுதாயம், விஞ்ஞானம் என்ற நூலிலிருந்து ' சிறியதிற்சிறியது'' எனும் கட்டுரையின் சிலபகுதிகள்
08 50 - மலரும் மொட்டுக்கள்
09 00 - மணிக்கு இரவு நிகழ்ச்சிகள் யாவும் நிறைவுபெறும்

### 1994.11.04 வெள்ளி காலை

07 02 - மாவீரவணக்கம்
07 15 - மணியாரம்
07 30 - செய்திகள்
07 35 - பத்திரிகைச் செய்திகள்
07 40 - தாயகப் பாடல்கள்
08 00 - மணிக்கு காலை நிகழ்ச்சிகள் யாவும் நிறைவுபெறும்.

# மருதானை கூட்டத்தில் நின்ற பெண் தற்கொலைபடையாளியை ஒத்தவராம்

## பிளாஸ்டிக் சத்திரசிகிச்சை நிபுணர் கூறுகிறார்

மருதானையில் நடைபெற்ற காமினியின் தேர்தல் பிரசாரக்கூட்டத்திற்கலந்துகொண்ட தற்கொலைப்படையாளி யான அப்பெண் சிவப்பு நிற சட்டை அணிந்துள்ளார் மக்கள் கூட்டம் கைதட்டும் போது அவரும் அங்கும் இங்கும் பார்த்தவாறு கைதட்டுகிறார் இடையிடையே தலைமுடியை சரிசெய்கிறார் என தெரிவிக்கப்படுகிறது. அக்காட்சி அன்று எடுத்த வீடியோ நாடாவில் பதிவாகியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்த வீடியோநாடா கொழும்பு வைத்தியசாலை விபத்து சத்திர சிகிச்சை பிரிவில் பணியாற்றும் பிளாஸ்டிக் சத்திர சிகிச்சை நிபுணரான டாக்டர் விஜயமாலவிற்கு போட்டு காண்பிக்கப்பட்ட போது கிரான்பாஸில் கண்டெடுக்கப்பட்ட பெண்ணின் அவயவங்களும்வீடியோவில் காணப்படும் பெண்ணை ஒத்ததாக இருப்பதாகவும் இவர் தமிழ்பெண்ணாகஇருக்கலாம் என்றும் அவர் உறுதி செய்தார். தலைமயிர், உடல் நிறம், மூக்கு: வெள்ளித் தோடுகள்- சாதாரண பருமன் ஆகியவற்றைக்கொண்டு பெண்ணை அடையாளம் காணமுடிகிறது என அவர் தெரிவித்தார்.

வீடியோவில் அப்பெண் தலையை திருப்பி முகத்தை மறைக்க முயல்கிறார் அப்போது வெள்ளித்தோடு காதில் தென்படுகிறது இவ் வீடியோ நாடா புலனாய்வு துறையினருக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது.

# சிறிதுகாலம் எதிர்க்கட்சி வரிசையிலே இ. தொ. கா. தொடர்ந்தும் இருக்கும்

## பாராளுமன்ற உறுப்பினர் சிவலிங்கம்

(கொழும்பு)

தொண்டமான் பொதுஜன ஐக்கிய முன்னணி அரசில் அமைச்சர்பதவியை ஏற்றுள்ள போதிலும் இலங்கை தொழிலாளர் காங்கிரசின் ஐந்து எம். பிக்களும் பாராளுமன்

பிறத்தில் எதிர்க்கட்சி தரப்லேயே தற்போதைக்குதொடர்ந்தும் இருப்பார்கள் என பாராளுமன்ற உறுப்பினர் முத்துசிவலிங்கம் அறிவித்துள்ளார்.

கடந்தபொதுத் தேர்தலின் போது தொண்டமான் தலைமையிலான இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் ஐக்கிய தேசியக் கட்சியின் யானைச் சின்னத்தில் போட்டியிட்ட போது 5 உறுப்பினர்கள் பாராளுமன்றத்திற்கு தெரிவானது தெரிந்ததே.

ஐக்கிய தேசியக் கட்சி தேர்தலில் தோல்வியடைந்து எதிர்க்கட்சியாக பாராளுமன்றம் சென்றதைத் தொடர்ந்து இலங்கைத் தொழிலாளர் காங்கிரசும் எதிர்அணி வரிசையிலேயே பாராளுமன்றத்தில் அமரவேண்டியநிலை ஏற்பட்டது: பின்பு ஐக்கிய தேசியக் கட்சியுடன் ஏற்பட்ட முரண்பாடுகளைத் தொடர்ந்து பாராளுமன்றத்தில் இ. தொ. காங்கிரஸ் தனிக்கட்சியாக செயற்பட சபாநாயகர் அனுமதி வழங்கியிருந்தார்:

தற்போது அக்கட்சியின் தலைவர் எஸ். தொண்டமான் பொதுஜன ஐக்கிய முன்னணி அரசில் சுற்றுலாத்துறை அமைச்சராக பதவி ஏற்றுவிட்ட போதிலும் தமது கட்சி சில காலங்களுக்கு எதிர்க்கட்சி ஆசனத்திலேயே அமர்ந்திருக்கும் என இலங்கைத் தொழிலாளர் காங்கிரசின் பாராளுமன்ற உறுப்பினரான முத்துசிவலிங்கம் கொழும்பு தமிழ் தினசரி ஒன்றுக்குத் தெரிவித்துள்ளார்.

# கடல் தொழில் அபிவிருத்தி; வட்டியில்லாக் கடன் திட்டம்

மு.மா.க.தொ.கூ.ச. சமாசத்தால் கடல் தொழிலாளரின் நலன்கருதியும் தற்போதையநாட்டு நிலைமையினைக் கருத்திற் கொண்டும் கடல் தொழிலாளருக்கு கடல் தொழில் அபிவிருத்திக்கெனவட்டியில்லாக் கடன் ரூபா 10,000 மும் வீச்சுத் தொழில் அபிவிருத்திக்கென வட்டியில்லாக் கடனாக ரூபா 5,000/- மும் சமாசத்தின உறுப்பினர் சங்க அங்கத்தவர்களுக்கு வழங்கப்பட்டது. 1-ம் கட்டமாக, புதுக்குடியிருப்பு, சிலாவத்தை, மாத்தளன், பூனைத்தொடுவாய், கள்ளப்பாடு ஆதிவைரவர், கள்ளப்பாடு சிறிமுருகன், கொக்குத்தொடுவாய் ஆகிய க.தொ.கூ. சங்கங்களுக்கு வழங்கப்பட்டது. 2-ம் கட்டமாக மணல்குடியிருப்பு, வண்ணாங்குளம் அன்னைவேளாங்கன்னி, வட்டுவாகல். செல்வபுரம், இரணைப்பாலை,செம்மலை,சுண்டிக்குளம் ஆகிய க.தொ.கூ. சங்கங்களுக்கும் வழங்கப்பட்டது.

அத்தோடு குறித்த கடன் பெற்ற சங்கங்களில் பூனைத்தொடுவாய், சுண்டிக்குளம், செம்மலை ஆகிய இடங்களுக்கு கடனாளிகளின் போக்குவரத்து நிலைமையினை கருதிற்கொண்டு நேரடியாக அவ்விடங்களுக்குச் சென்று கடன்கள் வழங்கப்பட்டதாகவும். இக் கடன் திட்டத்தில் இதுவரை பதினைந்து கிராம மட்டத்திலான க. தொ. கூ. சங்கங்களுக்கு ரூபா பதின்மூன்று இலட்சத்து நாற்பதினாயிரம் வழங்கப்பட்டுள்ளதாகவும், இனனும் பத்து சங்கங்களுக்கு சுழற்சி முறையில் வழங்கவுள்ளதாகவும் சமாசத்தின் தலைவர் திரு த. ரவிகரன் அவர்களால் தெரிவிக்கப்பட்டது. குறித்த கடன் வழங்கல் நிகழ்வில் முல்லை மாவட்ட கடல் புலிகளின் அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் சோபன் அவர்களும் கலந்துகொண்டு சிறப்பித்தார். குறித்த கடன் திட்டத்தைப்பற்றி சமாசத்தின் தலைவர் அவர்கள் மேலும் தெரிவிக்கையில் கடல் வலயச் சட்டத்தால் மீனவர்கள் பெரிதும் கஷ்டப்படுகின்றனர். அவர்களின் வாழ்க்கைத் தரத்தை முன்னேற்ற வேண்டும் என்ற நோக்கில் கஷ்ட நிலையில் வாழும் இவர்களுக்கு வட்டியில்லாமல் இக் கடன் வழங்குவதாகவும் தெரிவித்தார்.

## உதைபந்தாட்டம்

யாழ். மாவட்டப் பாடசாலைகள் விளையாட்டு அபிவிருத்திக்குழு நடத்தும் 15 வயதுப் பிரிவு உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டிகளில் இன்று பின்வரும் போட்டிகள் நடைபெறும்:-

கொக்குவில் இந்துவில், யாழ். இந்து எதிர் விக்றோறியாவும், மானிப்பாய் இந்து எதிர் மகாஜனாவும், யூனியன் கல்லூரி எதிர் ஸ்கந்தவரோதயாவும் விளையாடும்.

யாழ் இந்துவில், மானிப்பாய் இந்து எதிர் மகாஜனாவும், யூனியன் கல்லூரி எதிர் ஸ்கந்தவரோதயாவும் விளையாடும்.

நெல்லியடி ம. ம. வித்தியாலயத்தில் மட்டுவில் சந்திரபுரஸ்கந்தவரோதயா எதிர் கரணவாய் பொன்னம்பலம் வித்தியாலயம்

## வி. பி. கணேசன் சந்திரிகாவிற்கு ஆதரவு

(கொழும்பு)

பொதுஜன ஐக்கிய முன்னணிக்கு தமது கட்சியும் முழு ஆதரவை வழங்குவதாக ஜனநாயக தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் வி. பி. கணேசன் அறிவித்துள்ளார்.

## நீதிபதி

வித்துள்ளார். இந்நடைமுறை நேற்றுத் தொடக்கம் அமுலுக்கு வந்துள்ளதாக அவர் குறிப்பிட்டார்

இதன்மூலம் அரசியல் தலையீடுகளோ அன்றி வேறு தலையீடுகளோ விசாரணைகளின் போது ஏற்பட மாட்டாது எனவும் சுதந்திரமான விசாரணைக்கு இது வழிவகுக்கும் என தான் நம்புவதாகவும் அவர் தெரிவித்தார்

# இரு ஆண்டுமாணவரை ஒரே ஆண்டில் அனுமதிப்பது குறித்து முடிவில்லை

(யாழ்ப்பாணம்)

பல்கலைக்கழக அனுமதிக்கு காத்திருக்கும் இரு ஆண்டு மாணவர்களையும், ஒரேகல்வியாண்டில் கல்வி கற்க அனுமதிப்பது தொடர்பாக கொழும்பில் நடந்த அவசர க்கூட்டத்தில் எவ்வித தீர்க்கமான முடிவும் எடுக்கப்படவில்லை யென தெரிய வருகின்றது.

கடந்த மாதம் 13-ம் திகதி நடந்த இக் கூட்டத்தில் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு உறுப்பினர்களும், பல்கலைக்கழக துணைவேந்தர்களும் உயர்கல்வி சார் அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

தென்னிலங்கையில் ஜே. வி. பி கால கலவரங்களைத் தொடர்ந்து பல்கலைக்கழகங்களுக்கு மாணவர்களை அனுமதிப்பதில் இரண்டு வருட தாமதம் ஏற்பட்டது இந்த நிலையினால் தொடர்ந்தும் மாணவர்களை அனுமதிப்பதில் தாமதம் ஏற்படுவதை சீர் செய்யும் பொருட்டு இவ் விசேட கூட்டத்தில் ஆராயப் பட்டபோது நடைமுறைச் சிக்கல்கள் காரணமாக தீர்க்கமான முடிவெதுவும் எடுக்கப்படவில்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது இவ் விசேட கூட்டத்தில் யாழ் பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் க.குணரத்தினம்கலந்து கொண்டார். (பர)

# சக்திவாய்ந்த குண்டுடன் தப்பி ஓடிய சிப்பாய்

அதிசக்திவாய்ந்த குண்டுடன் இராணுவத்திலிருந்து தப்பியோடிய சிப்பாய் ஒருவர் அக்குண்டுடன் கைது செய்யப்பட்டுள்ளார்.

மேலும். மேற்படி சிப்பாய் கடவத்தையிலுள்ள விடுதியொன்றில் தங்கியிருந்ததாகவும் இவர் அங்கு தங்க வந்தநேரம் தொடக்கம் பதற்றமடைந்த நிலையில் காணப்பட்டதாகவும், சந்தேகம் அடைந்த பொலிசார் இவர் மீது விசாரணை மேற்கொள்ளப்பட்டபோது குண்டு கைப்பற்றப்பட்டதாகவும் தெரிய வருகிறது.

தனது பகையாளி ஒருவர் மீது விசவே இச்சக்திவாய்ந்த குண்டை தான் எடுத்துச் சென்றதாக இராணுவச் சிப்பாய் கூறியுள்ளார்.

காங்கேசன் சீமெந்து ஆலை

# பொறியியலாளர் குழு அறிக்கை சமர்ப்பிக்கும்

(கொழும்பு)

காங்கேசன் துறை சீமெந்துத் தொழிற்சாலையைமீண்டும் இயங்க வைக்கும் முயற்சியில் சிறிலங்கா அரசு தீவிரம் காட்டி வருவதாக செய்திகள் தெரிவிக்கின்றன,

இராணுவ கட்டுப்பாட்டு பகுதிக்குள் உள்ள இந்த தொழிற்சாலையை மீண்டும் இயங்க வைக்கும் சாத்தியம் பற்றி ஆராய பொறியியலாளர் குழு ஒன்று கடந்த வாரம் காங்கேசன்துறை வந்து திரும்பியதாக தெரியவருகிறது

இக்குழு சீமெந்துத் தொழிற்சாலையை பார்வையிட்டதுடன் அதனை இயக்குவதற்கு தேவையான சகல உபகரணங்கள் தொடர்பான மதிப்பீடுகளையும் மேற்கொண்டதாக அறியமுடிகிறது.

இக்குழு தற்போது இது தொடர்பான அறிக்கை ஒன்றை தயாரித்து வருவதாகவும் விரைவில் அரசிற்கு சமர்ப்பிக்கும் எனவும் அதன் பின்பே இதனை இயக்குவது குறித்து முடிவு செய்யப்படும் எனவும் அரச தரப்பில் தெரிவிக்கப்படுகிறது

## ஊழியர் கொடுப்பனவு

சீமெந்து கூட்டுத்தாபன ஊழியர்களின் ஒக்டோபர் மாதத்திற்கான சம்பளம் நாளையும், எதிர்வரும் 7-ம் திகதியும் காலை 9 மணி முதல் நண்பகல் 12 00 மணிவரை யாழ்ப்பாணம் வர்த்தக வங்கியில் வைத்து வழங்கப்படவுள்ளதாக கூட்டுத்தாபன கணக்காளர் திரு. க. மகேஸ்வரன் அறிவித்துள்ளார்.

# புலிகளுடன் பேச்சிற்கு பதில் சர்வகட்சி கூட்டம் நடத்துக

## அரசாங்க பேச்சாளர் தெரிவிப்பு

அரசாங்கத்திற்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே நடைபெற்றுவரும்சமாதானப் பேச்சுவார்த்தைகளுக்குப் பதிலாக சகல கட்சிகளும் அடங்கிய சர்வகட்சிக் கூட்டமொன்றை ஆரம்பிக்குமாறு அரசாங்கத்திடம் தாம் கோரிக்கைவிடப் போவதாக அரசாங்க சிரேஷ்டபேச்சாளர் ஒருவர் லங்காதீப பத்திரிகைக்குத் தெரிவித்துள்ளார்.

இக் கூட்டத்தில் விடுதலைப் புலிகள் உட்பட சகல கட்சிகளினதும்தலைவர்கள் கலந்து கொள்வதே சிறந்தது என தாம் கருதுவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## தேர்தலுக்கு

எதிர்வரும் ஒன்பதாம் திகதி சிறிலங்காவில் ஜனாதிபதித் தேர்தல் நடைபெறவுள்ளது தெரிந்ததே- இதனை ஒட்டி வடக்கில் கட்டுப்பாட்டு பிரதேசங்கள் உட்பட நாட்டின் சகல பகுதிகளிலும் 60 ஆயிரம் பொலிசார் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் எனவும் அச் செய்தி மேலும் தெரிவித்தது-

## கண்டெடுப்பு

சிற்றூர்திகளின் நடத்துனர்களால் கண்டெடுக்கப்பட்டு யாழ். மத்திய பஸ் நிலையக் காரியாலயத்தில் கைக்கடிகாரங்களும், பொதிகளும் ஒப்படைக்கப்பட்டுள்ளன. உரியவர்கள் இவற்றை அடையாளம் காட்டிப்பெற்றுக்கொள்ளவும்.

## விளையாட்டுப் போட்டி

(தென்மராட்சி)

விடுதலைப் புலிகள் மகளிர் அமைப்பின் சமூக மேம்பாட்டுப் பிரிவினரால் நடாத்தப்படும் தாவளை இயற்றாலை வீரவேங்கை அஜிந்தன் பாலர் பாடசாலையின் 3-ம் ஆண்டு விளையாட்டுப் போட்டி எதிர் வரும் 5.11.94 சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு நிர்வாக உத்தியோகத்தர் திரு க. உலேந்திரராசா தலைமையில் பாடசாலை மைதானத்தில் இடம் பெறவுள்ளது: (86)

## யுத்தத்திற்கு

மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் வடக்கு-கிழக்கில் நடைபெறும் யுத்தமானது கடந்த 11 வருட காலமாக நடந்துகொண்டிருக்கிறது: இந்த யுத்தத்திற்கு அரசாங்கம் நாளாந்தம் ஐந்து கோடி ரூபாவினை செலவிட்டு வருகிறது. இதுவரை காலமும் இந்த அர்த்தமற்ற யுத்தத்திற்கென அரசு எத்தனை கோடி ரூபாவினை செலவிட்டுள்ளது என்பதை சிந்தித்துப் பார்க்கவேண்டும்:

இந்த யுத்தத்தினால் நாடு பூராவும் அகதிகள் தொகை அதிகரித்த வண்ணமே உள்ளது: தற்போது ஏழரை லட்சம் மக்கள் அகதிகளாக வுள்ளனர் எனக் குறிப்பிட்டார்,

# தமிழீழ காவல்துறை பதவி வெற்றிடங்கள்

## உபபரிசோதகர்/காவலர் தரங்கள்

கல்வித் தகைமைகள்:-

(8-ம் வகுப்புத் தொடக்கம் க. பொ. த. (உயர்தரம்) வரை

உயரம்:- 5' 6''

வயது.- 18 தொடக்கம் 30 வரை

மேற்கூறிய தகைமையுடையவர்கள் 1994-11-10 ஆந் திகதி வரை பழைய பூங்காவில் உள்ள காவல்துறை அலுவலகத்திற்கு நேரடியாக சமுகந்தரவும். தபால் மூல விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. ஆண் / பெண் இரு பாலாரும் விண்ணப்பிக்கலாம்.

இதுவரை விண்ணப்பித்து நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படாதவர்களும், நேர்முகத் தேர்வின் இறுதித் தேர்விற்கு அழைக்கப்படாதவர்களும் உடனடியாக சமுகந்தரவும்.

பொறுப்பாளர்
தமிழீழ காவல்துறை

(சி-10640)

# 4ம் ஆண்டு நினைவஞ்சலி



தாயின்மடியில்
14-03-1968

தாயக மீட்பில்
03-11-1990

**லெப். காஞ்சனா**
**சரோஜினி கணபதிப்பிள்ளை**
(வல்வெட்டித்துறை)

கரையில்லாக் கல்வி கற்று சமூகம் செல்லும் வேளையிலே
களத்தினிலே போராடி காவியம் படைத்துவிட்டு
நிலத்தினிலே நீ சரிந்து ஆண்டு நான்கு சென்றதுவோ!
காஞ்சனா உன் கனவுகளும் நனவாகும்
சரித்திரத்தில் நீயும் சாகாவரம் பெறுவாய்!

நெடியகாடு,
வல்வெட்டித்துறை. (9942) -குடும்பத்தினர்

# மரண அறிவித்தல்கள்

## நாகநாதர் தியாகராசா

சுதுமலை வடக்கை பிறப்பிடமாக கொண்டவரும் நீர்வேலி வடக்கை வசிப்பிடமாக கொண்ட நாகநாதர் தியாகராசா (ஓய்வு பெற்ற களஞ்சியப் பொறுப்பாளர் உணவுத்திணைக்களம்) 2-11-94 அன்று காலமாகிவிட்டார். அன்னார் அழகரத்தினத்தின் அன்புக் கணவரும், செல்லப்பா வைத்தியரின் மருமகனும், செல்வராணி, நவநீதன், தங்கராணி, புஸ்பராணி, ஜெகநீதன் (ஜேர்மனி), யோகராணி (ஜேர்மனி) ஆகியோரின் அருமைத் தந்தையும், தபாபரன், பூபாலசிங்கம் (விற்பனைத் திணைக்களம் கோப்பாய்), இராசசிங்கம், (பிஸ்கால் உத்தியோகத்தர்). ஸ்ரீராஜபாலன் (ஜேர்மனி), சர்வேஸ்வரி, சியாமளா (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று (3-11-94) வியாழக்கிழமை மாலை 2.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தானக் கிரியைக்காக நீர்வேலி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இத் தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும் படி தாழ்மையாக கேட்டுக் கொள்கிறோம்.

நீர்வேலி வடக்கு,

தகவல்:
நவநீதன்
[மகன்]

(9964)

## திரு: வைரமுத்து அப்புத்துரை

[இளைப்பாறிய இ. போ. ச. சாரதி]

அம்பனை தெல்லிப்பழையைச்சேர்ந்த வைரமுத்து அப்புத்துரை 2-11-1994 அன்று காலமாகிவிட்டார். இவர் கனகேஸ்வரியின் அன்புக் கணவரும், அருட்செல்வன் (அறவழி போராட்டக் குழு சாவகச்சேரி), கௌரி (பிரதேச செயலகம் தெல்லிப்பழை), மாதினி ஆகியோரின் அன்புத்தந்தையும், அமரர் திருமதி இ சாம்பசிவம், திருமதி சி. ஜெயரத்தினம் (கனடா), திருமதி த; இராமசாமி (இளைப்பாறிய அதிபர் நகுலேஸ்வரா கீரிமலை) ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார். அன்னாரது ஈமக்கிரியைகள் இன்று (3-11-1994) வியாழக்கிழமை காலை 11.00 மணிக்கு அவரது இல்லத்தில் (அளவெட்டி அழுக்கை சந்தி) நடைபெறும் என்பதை அறியத்தருகின்றோம்.

தகவல்:
அ. அருட்செல்வன்
(மகன்)

(9965)

இப் பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி 31ஆம் இலக்கத்திலுள்ள ஈழநாதம் பணிமனையில் 1994-ம் ஆண்டு நவம்பர் மாதம் 03-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.